விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | மலர் : 01 | 27.03.2021 சனிக்கிழமை | இதழ் : 117 | பக்கங்கள் : 16




## மாணவர்களுக்கு ஆயுதப்பயிற்சி மத்ரஸா ஆசிரியர்கள் கைது!

கொழும்பு,மார்ச்.27

புத்தளத்தில் பாடசாலை மாணவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கிய குற்றச்சாட்டில் இரண்டு மத்ரஸா பாடசாலை ஆசிரியர்கள் கைதுசெய்யப்பட்டனர் என சட்டமா அதிபரின் இணைப்பு அதிகாரி நிஷார ஜயரட்ன தெரிவித்தார்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது என நிஷார ஜயரட்ன குறிப்பிட்டார். (எ)

# புகலிடம் கோரிய தமிழர் பலர் ஜேர்மனியில் கைது

### 30 ஆம் திகதி நாடு கடத்துவதற்குத் திட்டம்?

பேர்லின், மார்ச் 27

கடந்த சில தினங்களில் ஜேர்மனியின் பல்வேறு பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டு, இரகசிய இடங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழர்கள் பலரை 30 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்த ஜேர்மனி திட்டமிட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

15



05 புத்தூரில் மீண்டும் அகழ்வாராய்ச்சி!



08 தி.மு.க தேர்தல் அறிக்கையில் குளறுபடிகளா?



13 இலங்கை – மேற்கிந்தியா முதல் டெஸ்ட் சமநிலை!



14 மாகாண முறைமையை இரத்து செய்ய முடியாது

# உள்ளக விசாரணை இன்றேல் சர்வதேசப் பொறிமுறைதான்!

### தயான் ஜயதிலக்க எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 27

“வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களின் பங்குபற்றலுடன் விசேட நீதிமன்றத்தை நிறுவி உள்ளக விசாரணையை இலங்கை முன்னெடுக்காவிட்டால் சர்வதேச பொறிமுறை செயற்படத் தொடங்கிவிடும். அதனைத் தடுத்து நிறுத்த முடியாது.”

-இவ்வாறு ஐ.நாவுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியும், சிரேஷ்ட இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.

15





## காணாமலாக்கப்படும் குளம்

### எதிர்த்து வவுனியாவில் போராட்டம்

வவுனியா,மார்ச்.27

வவுனியாக் குளம் சுற்றுலா மையம் என்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தக் கோரி சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா குளத்துக்கான மக்கள் செயலணியின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை இந்தப் போராட்டம் ஆரம்பமானது.

15

## ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தில் என்ன நிலைப்பாட்டை எடுப்பது?

### வெளிவிவகார அமைச்சு தீவிரமாக ஆராய்கிறது

கொழும்பு, மார்ச் 27

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கோரியுள்ள நிலையில், ஐ.நா. பொதுச் சபையின் 76 ஆவது கூட்டத் தொடரில் அது குறித்து

15

## கார் - டிப்பர் மோதி பளையில் விபத்து!

### சிறுவர்கள் இருவர் மரணம்

கிளிநொச்சி, மார்ச் 27

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பளைப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்

15

## யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ சேவைகள் தொடரும்

### அவசியமின்றி செல்வதை தவிருங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். போதனா வைத்தியசாலையின் சேவைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வசதியாக தேவையற்ற வருகைகளைத் தவிர்க்குமாறு நிர்வாகம் கேட்டுள்ளது.

போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை உள்ளிட்ட அனைத்து மருத்துவ சேவைகளும் சுமுகமாக முன்னெடுக்கப்படும் என்று பிரதிப் பணிப்பாளர், மருத்துவர் சி.யமுனானந்தா தெரி

15

## யாழ்ப்பாணத்தில் 26 பேர் உட்பட வடக்கில் 29 பேருக்கு கொரோனா!

### மருத்துவர்கள், தாதியர்களுக்கும் தொற்று

யாழ்ப்பாணம், மார்ச்.27

வடக்கு மாகாணத்தில் மேலும் 29 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

இதில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவ சேவையாளர்கள் உட்பட 19 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளக...

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அடுத்துவரும் அமர்வுகளில் என்ன நடக்கும் என எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கை விவகாரம் தொடர்பில் 6 மாதங்களுக்கு ஒரு தடவை மீளாய்வு செய்யப்படும். 2022 செப்ரெம்பர்வரை காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் திரட்டப்படும் ஆவணங்கள் எல்லாம் 2022 செப்ரெம்பருக்கு பிறகு உலக நாடுகளிலுள்ள நீதிமன்றங்களுக்கு அனுப்படும். அவ்வாறு நடைபெற்றால், குறைந்தபட்சம் பிரேரணையை ஆதரித்த 22 நாடுகளிலாவது வழக்கு தொடுக்கப்படும்.

இவ்வாறு வழக்கு தொடுத்தாலும் எதுவும் செய்யமுடியாது என இலங்கை அரசாங்கம் சவால் விடுக்கும்பட்சத்தில் அடுத்த கட்ட நடவடிக்கையாக, முதலீடு, சுற்றுலாத்துறை, வர்த்தகம் உள்ளிட்ட விடயங்களில் இறுக்கமான போக்கு கடைப்பிடிக்கப்படும்.

எனினும், இலங்கைக்கு இன்னுமொரு வாய்ப்பு எஞ்சியுள்ளது. 2022 செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் சேர். டெஸ்மன்டி சில்வாவாலும் (பரணகம ஆணைக்குழு) , அதற்கு முன்னர் நல்லிணக்க ஆணைக்குழுவாலும் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கமைய நம்பகமான விசாரணை பொறிமுறை உருவாக்கப்படவேண்டும்.

தங்களுக்கு விசுவாசமான நீதிபதிகளை நியமிக்காமல், உலகம் ஏற்றுக்கொள்கின்றனவர்களை அல்லது வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை நீதிபதிகளை உள்ளடக்கிய வகையில் விசேட நீதிமன்றமொன்றை நிறுவி, விசாரணைகளை முன்னெடுத்து தவறிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கப்படவேண்டும். வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களுக்கும் அழைக்கப்படவேண்டும்.

அவ்வாறு செய்யாவிட்டால் சர்வதேசப் பொறிமுறை செயற்பட ஆரம்பித்துவிடும். இலங்கை விவகாரம் ஏற்கனவே சர்வதேச மயப்படுத்தப்பட்டிருந்தாலும் அதன் பொறிமுறை செயற்படவில்லை. இனி செயற்படத் தொடங்கினால் அதனை நிறுத்த முடியாது-என்றார்.

## ஐ.நா பொதுச்...

ஆராயப்படவுள்ளதால், அதில் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்பது குறித்து வெளிவிவகார அமைச்சு தீவிரமாக ஆராயத் தொடங்கியுள்ளது.

இது குறித்த செயல்முறையிலுள்ள நடைமுறைசார்ந்த விடயங்களை வெளிவிவகார அமைச்சு ஆராய்ந்து - அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பதையிட்டு திட்டமிடவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜெனிவா தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கும் போர்க் குற்றங்கள் குறித்த ஆதாரங்களைச் சேகரிப்பது, பாதுகாப்பது, பகுப்பாய்வு செய்வது போன்ற செயற்பாடுகளுக்காக மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்துக்கு தேவையாகவுள்ள நிதி ஒதுக்கீட்டுக்கான அனுமதி பொதுச் சபையின் 76 ஆவது கூட்டத் தொடரிலேயே பெற்றுக்கொள்ள வேண்டும்.

பொதுச் சபையின் 76 ஆவது கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகி இரண்டு வாரங்களுக்குத் தொடரும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பட்ஜெட்டில் இலங்கையில் ஆதாரங்களைச் சேகரிக்கும் பொறிமுறைக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரே புதிதாக நிதி ஒதுக்கீட்டைச் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது.

ஆதாரங்களைச் சேகரிப்பதற்கான பொறிமுறைக்கு 12 புலனாய்வாளர்களை மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நியமிக்கவுள்ளது. உண்மைகளைக் கண்டறிதல், தகவல்களைச் சேகரித்தல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல் என்பவற்றுக்காக இவர்கள் 4 தடவைகள் கள விஜயத்தை மேற்கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆதாரங்களைத் திரட்டும் இந்தச் செயற்பாடுகளைப் பொறுத்தவரையில், செய்மதிப் படங்களைப் பெற்றுக்கொள்வது, அவற்றைப் பகுப்பாய்வு செய்வது என்பவற்றுடன் ஆதாரபூர்வமான தகவல்களின் காப்பகம் ஒன்றை உருவாக்குவதும் உள்ளடங்குகின்றது.

இருந்தபோதிலும், இதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதில் அதிகளவு நெருக்கடியை மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இதற்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## புகலிடம்...

கடந்த சில நாட்களாக ஜேர்மனியில் புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் பலர் பல்வேறு இடங்களிலும் பரவலாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பது தெரியாத நிலை காணப்படுவதாக குடும்பத்தவர்களும் உறவினர்களும் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களின் கையடக்க தொலைபேசிகள் பறிக்கப்பட்டுள்ளதால் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக குடும்பத்தவர்கள் தெரிவித்துள்ளனர். இவர்களை ஜேர்மனி 30 திகதி நாடு கடத்தவுள்ளதாக ஜேர்மனியிலுள்ள மனித உரிமைகள் அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

இவர்களில் 31பேர் குறிப்பிட்ட ஒரு பகுதியில் தடுத்து வைக்கப்பட் டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள மேலும் பலர் இங்கு தடுத்துவைக்கப்படலாம் எனவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட 29 தமிழர்கள் Dusseldorf நகரத்தின் விமான நிலையத் தொகுதியிலுள்ள கட்டடமொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறே ஞவரவவபயசவ எனுமிடத்திலும் சிலர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

## காணாமலாக்கப்...

இதன்போது, குளங்களை சாக்கடையாக்குவதா அபிவிருத்தி?, அடுத்த தலைமுறையை குடிநீருக்காக கையேந்த விடாதே! உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். (அ-எ)

## யாழ். போதனா...

வித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் இருவர், தாதியர்கள் மூவர் உட்பட நிரந்தர பணியாளர்கள் 9 பேரும் மருத்துவ பீட மாணவர்கள் இருவர் தாதிய மாணவர் ஒருவரும் சுத்திகரிப்பு பணியாளர் ஒருவரும் என 13 பேர் நேற்று கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதனையடுத்து யாழ். போதனா வைத்தியசாலை உயர்மட்டக் கூட்டம் நேற்றிரவு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மேற்படி வலியுறுத்தினார்.

”போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை உள்ளிட்ட அனைத்து மருத்துவ சேவைகளும் சுமுகமாக முன்னெடுக்கப்படும்.

கிளினிக் பெறும் நோயாளர்களுக்கு மருந்துகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். நோயாளர்களை பார்வையிட வருவோர் தவிர்க்கவேண்டும்.

போதனா வைத்தியசாலைக்குள் தேவையற்ற நடமாட்டங்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சாணக்கியனும், சுமந்திரனும் மாவையை ஓரம்கட்ட முயற்சி

## சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

சாணக்கியனும், சுமந்திரனும் மாவை சேனாதிராசாவை ஓரம்கட்டும் வகையில் செயற்பட்டுள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார். இவ்வாறான விடயங்கள் கட்சிக்குள் பெரிய முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளதாகவும், அவர் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டமொன்றில் கிழக்கிலிருந்து சாணக்கியனும், சுமந்திரனும் பேசியிருந்தார்கள். மாவை சேனாதிராசா ஒரு கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் அதில் பங்கு கொள்ளவில்லை. அவருக்கு அந்த விடயம் பேசப்படவில்லை அல்லது அவரை அதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படவில்லை என்ற ஒரு மனக்குறை அவருக்கு உள்ளது.

என்னை அந்த கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டிருந்தது. எனினும் எனக்கு புதுக்குடியிருப்பில் வேறொரு நிகழ்வு இருந்தது. குறித்த கூட்டத்திற்கு மாவை சேனாதிராசாவை அழைப்பதாக சுமந்திரன் எனக்கு கூறியிருந்தார் என்றபோதும் அவரை அழைத்ததாக நான் அறியவில்லை.

மாவை சேனாதிராசாவிடம் கேட்ட போது அப்படியொன்று இல்லை என்று தெரிவித்தார். இதெல்லாம் கட்சிக்குள் பெரிய முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளன.

இதேவேளை, ஒரு கட்சியை சேர்ந்த அரசியல்வாதிகள் வடக்கிலிருந்து கிழக்கிற்கு வந்தாலோ, கிழக்கிலிருந்து வடக்கிற்கு வந்தாலோ அங்கிருக்கும் கட்சியின் தலைவர் அல்லது செயலாளர் ஆகியோரை சந்திக்க வேண்டியது அவசியமாகும்.

அத்துடன், கடந்த உள்ளூராட்சி தேர்தலில் எங்கள் கட்சியில் பல இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்காததால் வேறு கட்சியில் தேர்தலில் நின்று வென்றிருந்தார்கள் பலர். அவர்களில் தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் இளைஞர்கள், ஒற்றுமையை விரும்பும் இளைஞர்கள் பலர் தமிழரசுக் கட்சிக்கு வருவதற்கு தயாராக இருக்கின்றார்கள்.

கட்சிக்குள் கூட்டுப்பொறுப்பு, வெளிப்படைத்தன்மை மேம்படுத்தப்பட வேண்டும். தேர்தலில் வெற்றி பெற்ற நாம், தேர்தலில் தோற்ற எம் சக வேட்பாளர்களையும் அரவணைத்து செல்லும் மன நிலையில் இருக்க வேண்டும்.

கட்சியில் பொறுப்புக்கள் அனைவருக்கும் பகிர்ந்து வழங்கப்பட்டு அவர்கள் சுதந்திரமாக செயற்படக்கூடிய களம் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். கட்சிக்குள் ஒவ்வொரு ஆதரவாளர்களும் ஒருவொருவருக்கொருவர் சமூக வலைத் தளங்களில் தாக்கி பேசும் நிலை மாற்றப்பட வேண்டும்.

ஒவ்வொரு தலைவர்களும் தங்கள் ஆதரவாளர்களை கட்டுப்படுத்த வேண்டும். இவை தான் கட்சியின் ஒற்றுமையை வளர்க்கும்.

இனிவரும் தேர்தல்களில் களம் இறக்கப்படும் வேட்பாளர்களின் கல்வித்தரம், சமூக ஈடுபாடு, சமூக அந்தஸ்து ஆகியவை பார்க்கப்பட்டே வேட்பாளர்களாக இறக்கப்பட வேண்டும்-என்றார்.

## யாழ்ப்பாணத்தில்...

போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வு கூடங்களில் 634 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே இந்த 29 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவர்கள் இருவர், தாதிய உத்தியோகத்தர்கள் மூவர், சுகாதார ஊழியர்கள் நால்வர், மருத்துவபீட மாணவர்கள் இருவர், தாதிய மாணவர் ஒருவர், சுத்திகரிப்புப் பணியாளர் ஒருவரும் இவ்வாறு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

மேலும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 6 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை கைதிகள் இருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

காரைநகரில் சுயதனிமைப்படுத்தப்பட்ட மூவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்கள் காரைநகர் பேருந்து சாலை தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள்.

திருநெல்வேலி பொதுச் சந்தையைச் சேர்ந்த மேலும் இரண்டு தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டனர்.

தெல்லிப்பழை வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாந்தை மேற்கைச் சேர்ந்த 62 வயதுடைய ஒருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களுடன் தொடர்புடைய இருவருக்கு தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டது என மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ-எ-03)

## கார் - டிப்பர்...

துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பளையின் இத்தாவில் பகுதியில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிய திசையில் கார் காணப்படுவதாவும் அதற்கு நேரெதிரே டிப்பர் காணப்படுவதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

சம்பவத்தில் 9 மற்றும் 12 வயதுகளை உடைய சிறுவர்கள் இருவரே உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயம் அடைந்த சிறுவர்களின் தந்தை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

## வெளிவிவகார....

(03ஆம் பக்கம் பார்க்க)

வட்டாரங்கள்கூட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கையரசை சாடுவதையே காணமுடிகிறது. அத்துடன், தற்போதைய ஆட்சியில் பல்வேறு வடிவத்திலும் அடிப்படை மனித உரிமைமீறல்கள் அதிகரித்துள்ளதையும் தென்னிலங்கை அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுபவவையாக இருக்கின்றன.

இத்தகைய பின்னணியில் வெளிவிவகார அமைச்சர் இலங்கை மீதான ஜெனிவா பிரேரணையை சிலநாடுகளின் தேவை கருதி நிறைவேற்றப்பட்டுள்ளதென குறிப்பிடுவது எவ்வகையிலும் ஒரு நல்ல கருத்தாக இருக்கமுடியாது. அரசியல் ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ அல்லது இராணுவ ரீதியாகவோ வெளிநாடுகளை தங்கியிருக்கவேண்டிய தேவை இலங்கைக்கே இருக்கின்றது.

இவ்வகையில் இலங்கைக்கு பல்வேறு வழிகளிலும் உதவி வருகின்ற நாடுகளே இத்தடவை ஜெனிவா பிரேரணையை கொண்டுவந்துள்ள நிலையில், இலங்கை அவற்றின் நியாயமான மற்றும் மனிதாபிமான கண்ணோட்டத்திற்கு உரிய இடத்தை வழங்காத பட்சத்தில், எதிர்காலத்தில் சர்வதேச ரீதியாகவும் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை மற்றும் ஏனைய பொருளாதார விடயங்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் இலங்கையரசுக்கு பாதகமான சூழ்நிலைகள் தோன்றக்கூடும். பொருளாதார ரீதியான தடைகள் மற்றும் இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு வெளிநாட்டு பயணத்தடைகள் என்பவை ஏற்பட்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லையென்றே குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

இரண்டாயிரத்து பதினோராம் ஆண்டு நடந்த உலகக்கிண்ண கிரிக்கட் போட்டியை மறந்திருக்க மாட்டீர்கள்.

இந்தியா, இலங்கை, பங்காளதேஷ் ஆகிய மூன்று நாடுகளிலும் நடைபெற்ற போட்டியில் இறுதிப் போட்டி இந்தியாவின் மும்பை நகரில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் இந்தியாவும் இலங்கையும் மோதின.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் கடைசியாக இந்திய அணி ஆறு விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வென்று கிண்ணத்தை சுவீகரித்தது.

போட்டி நடைபெற்ற அன்று கடைசியில், இந்திய அணி வெற்றிபெற்ற பின்னர், யாழ்ப்பாணம் முற்றவெளியில் நமது இளைஞர்கள் பலர் ஒன்றுகூடி பட்டாசு வெடித்து மகிழ்ந்தனர்.

அதாவது இந்தியாவின் வெற்றியை அவர்கள் கொண்டாடினர்.

இதனைப் பாத்த இந்த ஊர்க்குருவிக்கு ஒன்றும் ஆச்சரியமாக இருக்கவில்லை.

ஆனாலும் அவர்களின் மனநிலையை அறிய விரும்பி, அவர்களில் சிலரிடம் இந்தியா வெற்றி பெற்றது உங்களுக்கு அவ்வளவு சந்தோஷமா என்று கேட்டபோது, அவர்கள் சொன்ன பதில்,

'இல்லை இல்லை... சிறிலங்கா தோற்றது மகிழ்ச்சி... அதுதான் பட்டாசு கொழுத்துகின்றோம்....' என்றார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை சிறிலங்காவும் பாகிஸ்தானும் விளையாடி பாகிஸ்தான் வெற்றி பெற்றிருந்தாலும் பட்டாசு கொழுத்தித்தான் இருப்பார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் எதிர்ப்பது குறித்து நேற்றைய தினம் இங்கே குறிப்பிட்டிருந்தோம்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது நாட்டிற்கு பாரிய பின்னடைவைக் கொடுக்கப் போகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. போன்ற எதிர்க்கட்சிகளும்தான் கண்டிக்கின்றன. அவர்களைப் பொறுத்தவரை இந்த அரசாங்கம் இந்த விவகாரத்தை எதிர்கொண்டமுறை தவறானது. இதனால் நாடு எதிர்காலத்தில் பல நெருக்கடிகளை சந்திக்கும் என்பது அவர்களது வாதம்.

ஆனால், குற்றவாளிகளை குற்றவாளிகளே விசாரிப்பதா என்று கஜேந்திரகுமார் கேட்பதும் நியாயமானது தான் என்று இங்கே நேற்றைய பதிவில் குறிப்பிட்டிருந்ததைக் கவனித்த நண்பர் ஒருவர் தொடர்புகொண்டார்.

'அவர் எதற்காக அதனை கண்டித்தார் என்பதைத் தான் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறாரே, நீங்கள் என்ன அவருக்கு வெள்ளையடிக்கப் பார்க்கிறீர்களா?' என்று அவர் கேட்டபோது எதுவும் புரியவில்லை.

அவர் இந்த விடயத்தில் மாத்திரமல்ல, பாராளுமன்றத்தில் அவரது முதலாவது உரையின் போதும் அதைத்தான் வலியுறுத்தினார், என்றார் அவர்.

'இந்த அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொண்டுவருவது மாத்திரமே இந்த தீர்மானத்தின் முக்கிய நோக்கம் என்பதால்தான் அவர் அந்த தீர்மானத்தை எதிர்க்கிறார். அதைத்தான் அவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

அவரது முதலாவது பாராளுமன்ற உரையின் போதும், இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகாணவில்லை என்றால் உலக நாடுகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுவிடும் என்ற தனது கவலையைத் தான் சொன்னார்.

இப்போதும், இந்த தீர்மானம் அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கவும் சொல்லப்போனால் மீண்டும் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதையுமே நோக்கமாகக் கொண்டது என்பதால் தான் அவர் இந்த தீர்மானத்தை எதிர்க்கிறார்' என்று விளக்கமளித்தார் அந்த நண்பர்.

இதற்காகத் தானே நாடுகடந்த தமிழீழ அரசாங்கமும் இந்த தீர்மானத்தை கண்டித்திருந்தது. அப்படியெனில், அவர்களும் அரசாங்கத்தை பாது காப்பதற்குத்தான் விரும்புகின்றார்களோ என்ற கேள்வியையும் கேட்காமல் இருக்கமுடியவில்லை.

அது சரி, இந்தக் கதைக்கும் அந்த கிரிக்கட் கதைக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் விழி பிதுங்குவதும் சரிதான்.

இந்தத் தீர்மானத்தை இவர்கள் எதிர்த்தபோது, குற்றவாளிகளைக் குற்றவாளிகளே தண்டிப்பதா என்று அவர்கள் கேட்பதும் நியாயமாகத்தானே என்று நான் நினைத்ததும், இந்தியாவின் வெற்றியின் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்குத்தான் அவர்கள் பட்டாசு கொழுத்தினார்கள் என்று நான் நம்பியது போலத்தானோ என்ற கேள்வி என்னுள் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை!

**- ஊர்க்குருவி.**

### உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்:

# தன் மீதான குற்றச்சாட்டுக்களை அடியோடு மறுக்கிறார் மைத்திரி



கொழும்பு, மார்ச் 27

**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைத் தடுக்கத் தவறியதாக தன் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார்.**

போர் காலத்திலும் இதுபோன்ற தாக்குதல்கள் நடந்துள்ளன. அவை பயங்கரவாதத் தாக்குதல்கள் என்பதால் அதிகாரிகளுக்கு அதில் பொறுப்புக் கூறல் இருக்கவில்லை. இதுபோன்றே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலையும் பார்க்க வேண்டும் எனவும் மைத்திரிபால எம். பி. கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'2015இல் ஜனாதிபதியாக நான் பதவியேற்ற பின்னர் தேசிய பாதுகாப்பைப் பலவீனப்படுத்துவதற்கு இடமளிக்கவில்லை. துரதிர்ஷ்டவசமாகவே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடந்துள்ளது. அந்தக் காலப் பகுதியில் ஐ.எஸ். இயக்கத்தால் உலக நாடுகளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வந்தன. அது தொடர்பாக தேசிய பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் கலந்துரையாடி, அதுபோன்ற தாக்குதல் இலங்கையில் நடப்பதை தடுக்குமாறு அதிகாரிகளுக்குக் கூறியிருந்தேன்.

எவ்வாறாயினும் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி - உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற தாக்குதல் தொடர்பாக, அதற்கு முன்னர் புலனாய்வுத் தகவல் கிடைத்திருந்த நிலையில், அந்தத் தகவல் புலனாய்வு அதிகாரிகளுக்கிடையே பகிரப்பட்டிருந்தபோதும், தாக்குதல் நடந்து முடியும் வரையில் அது பற்றி எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை" - என்றார். (ஐ)



## சிறிதரன் எம்.பியின் வீட்டுக்குள் புகுந்த குழு மகன் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரனின் வீட்டுக்குள் புகுந்த 8 பேர் கொண்ட குழு அவரின் மகன் மீது தாக்குல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையாகவுள்ள சிறிதரன் எம்.பியின் வீட்டிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

4 மோட்டார் சைக்கிள்களில் வாள், கண்ணாடி போத்தல், இரும்பு கம்பிகளுடன் வந்த இளைஞர் குழுவே இந்தத் தாக்குதலை நடத்தியது.

சிறிதரன் எம்.பியின் மகன் மீது தாக்குதல் நடத்திய அந்தக் குழு, அவரின் மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது. வீட்டிலிருந்த சி. சி. ரீ. வி கமெரா பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-3)

## வடக்கில் மூன்று கட்டங்களாக கண்புரை சத்திர சிகிச்சை முகாம்!

### பதிவு செய்யுமாறு பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்கு மாகாணத்தில் கண்புரை நோயால் அவதியுறும் நோயாளர்களுக்கு சத்திர சிகிச்சை முகாம்களை மூன்று கட்டங்களாக நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில், "எதிர்வரும் மே மாதம் வட மாகாண சுகாதார திணைக்களமும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையும் இணைந்து கண்புரை சத்திர சிகிச்சை முகாங்களை 3 கட்டங்களாக நடத்தத் தீர்மானித்துள்ளன.

எனவே, கண்புரை நோயால் அவதியுறும் நோயாளர்கள் தத்தமது பிரதேசத்திற்கு அருகில் இருக்கும் மாவட்டப் பொது வைத்தியசாலைகள் (கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்), பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, மாங்குளம், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைகளில் அல்லது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பதிவுகளை மேற்கொண்டு சத்திர சிகிச்சையை பெற முடியும் என்றுள்ளது. (ஐ - 3)

## வகுப்பறையில் மாணவர் தொகையை மட்டுப்படுத்துவதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு, மார்ச் 27

மேல் மாகாண பாடசாலைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டாலும், பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வகுப்பொன்றில் ஆகக் கூடுதலாக 15 மாணவர்களை மாத்திரமே அனுமதிக்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது வகுப்பொன்றில் 30 மாணவர்கள் காணப்பட்டால், அவர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து நாளொன்றுக்கு 15 பேரை மாத்திரம் வகுப்பில் இருக்கச் செய்ய முடியும். மேலும், வகுப்பில் 45 மாணவர்கள் காணப்பட்டால், அவர்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்து வகுப்புக்களை நடத்த வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு வகுப்பில், ஒவ்வொரு நாளும் சங்கிலித் தொடராக 15 மாணவர்கள் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

கல்வி tv
CHANNEL-1

காலை
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

பகல்
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
27.03.2021 சனிக்கிழமை
சார்வரி, பங்குனி 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## தமிழர்கள் ஏமாற்றப்படுகின்றனரா?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பிரேரணை வெளியானதிலிருந்து, சர்வதேசம் மீண்டும் தமிழர்களை ஏமாற்றிவிட்டதாக சிலர் பேசுவதை காணமுடிகின்றது. கூடவே, இந்தியா மீண்டும் தமிழர்களின் முதுகில் குத்திவிட்டதாகவும் சில விமர்சனங்களை காணமுடிகின்றது. சிலர் கூறுவதுபோன்று, தமிழர்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றனரா? தமிழர் அரசியல் பரப்பில் காணப்படும் ஒரு பிரதான பிரச்னை - எல்லாவற்றையுமே தங்களுடைய கண்ணோட்டத்தில் மட்டுமே நோக்குவது. நாங்கள் எங்களின் நலனிலிருந்து சிந்திப்பதுபோன்றுதான், மற்றவர்கள் தங்களின் நலன்களிலிருந்து சிந்திப்பார்கள் என்பதை அனைவருமே இலகுவாக மறந்துவிடுகின்றனர். இந்த பின்புலத்தில் நோக்கினால், இங்கு ஏமாற்றப்படுகின்றோம் - என்று ஆவேசப்படுவதில் எவ்வித நியாயமும் இருக்கப் போவதில்லை.

பூச்சிய வரைபு வெளியானபோதே, இம்முறை எவ்வாறானதொரு பிரேரணை வரப்போகின்றது என்பது தெளிவாகிவிட்டது. ஆனால், இங்கு கவனிக்கவேண்டிய விடயம், அனைத்துமே மிகவும் வெளிப்படையாகவே இடம்பெற்றிருந்தன. எனவே, இதில் ஏமாற்றுவதற்கு - ஏமாறுவதற்கு எதுவுமில்லை. தமிழர் தரப்பு கோரிய சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், மற்றும் சிரிய விவகாரத்தின்போது கையாளப்பட்ட ஐஐஐஆ பொறிமுறை ஆகியவை இம்முறை பிரேரணையில் இடமபெறாது என்பது ஆரம்பத்திலிருந்தே வெளிப்படையாக தெரிந்த சங்கதிகள்தாம். மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் அறிக்கையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பரிந்துரைக்கப்பட்டிருந்தாலும்கூட, பிரேரணையில் அதனை உள்ளடக்குவதற்கான நிலைமை இருந்திருக்கவில்லை.

அதேவேளை, இந்தியா வாக்கெடுப்பில் நடுநிலை வகித்தமை தொடர்பிலும் சிலர் அளவுக்கதிகமாக ஆவேசப்படுவதுபோல் தெரிகின்றது. இங்கும் விடயங்கள் தெளிவாக விளங்கிக்கொள்ளப்படவில்லை. தற்போதைய நிலைமையில், கொழும்புடனான இராஜதந்திர தொடர்புகளில் கடுமையான நெருக்கடிகளை ஏற்படுத்திக்கொள்ள இந்தியா விரும்பியிருக்கவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், இந்தியா வாக்கெடுப்பில் நடுநிலைமை வகித்திருந்தது. அதேவேளை, வாக்கெடுப்பு வெற்றிபெறக்கூடிய நிலையில்தான், இந்தியாவும் வாக்கெடுப்பை தவிர்த்திருக்கின்றது. இந்தியாவின் நடுநிலையால், பிரேரணை தோற்றிருக்குமென்றால் - அப்போது, இந்தியாவின்மீது தமிழர்கள் கோபப்படுவதில் ஓர் அர்த்தம் இருந்திருக்கும். ஆனால், பிரேரணை வெற்றிபெற்றிருக்கும் நிலையில் இந்தியாவின் நடுநிலை, ஒரு பாதிப்பான தலையீடல்ல. அதேவேளை, இந்தியா மிகவும் உறுதியான வகையில் அதிகாரப்பகிர்வு தொடர்பிலும், மாகாண சபை முறைமை தொடர்பிலும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றது. மாகாண சபை முறைமையை இல்லாமலாக்கவேண்டுமென்னும் வாதம் முன்வைக்கப்பட்டுவரும் சூழலில்தான், இந்தியா தெளிவான செய்தியை வழங்கியிருக்கின்றது. இந்தியா 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் வலியுறுத்துவதும் ஆச்சரியமான ஒன்றல்ல. 1987இலிருந்து இந்தியா இவ்வாறானதொரு நிலைப்பாட்டையே முன்வைத்து வருகின்றது. இங்கும், தமிழர்களை இந்தியா ஏமாற்றிவிட்டதாக கூறுவதற்கு ஒன்றுமில்லை. ஒரு விடயத்தை வெளிப்படையாக முன்வைக்கும்போது, ஏமாற்றப்படுவதற்கு எதுவுமிருக்கப்போவதில்லை.

எனவே, தமிழர்களை எவருமே ஏமாற்றவில்லை. தமிழர்கள் அவ்வாறு எண்ணிக்கொண்டால் - எப்போதும் ஏமாந்துகொண்டிருப்பதான உணர்வுடனேயே தமிழர்கள் வாழநேரிடும். இதில் எந்தக் காலத்திலும் தமிழர்கள் மீளமுடியாது. ஏனெனில், எந்தவொரு பலம் பொருந்திய நாடும், தனது நலனை புறம்தள்ளி, தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை.

# வெளிவிவகார அமைச்சரின் வேடிக்கையான கருத்து!

- அலசுவது இராஜதந்திரி -

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைமீது நிறைவேற்றப்பட்ட 46-1 பிரேரணை சில நாடுகளின் தேவை கருதியே நிறைவேற்றப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் இக் கருத்தை நோக்கும்போது, இலங்கை ஏதோ ஓர் இராணுவ அல்லது பொருளாதார வல்லரசாக இருப்பது போலவும், இதன்காரணமாகவே இலங்கைக்கு அரசியல் ரீதியாக சவால் விடுத்து அதன் பொருளாதார வளர்ச்சியையும் மழுங்கடிக்கும் விதத்தில் பிரேரணை கொண்டுவரப்பட்டிருப்பதுபோலவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சுதந்திரமடைந்து 70 ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்றுவரை ‘பிச்சாடனர்’ வேடத்திலேயே உலக நாடுகளிடம் கடனுக்குமேல் கடன்பெற்று திக்குமுக்காடிய நிலையில் இருந்துவருகின்றது. அத்துடன், இலங்கையின் செலவீனங்கள் என்பது அபிவிருத்தியைவிட, பாதுகாப்பு என்ற ரீதியில் இராணுவ ரீதியான செலவினங்களுக்கே அதிகளவில் ஒதுக்கப்பட்டு வருவதை அனைத்து நாடுகளும் அறிந்து வைத்துள்ளன. இலங்கை கடந்த மூன்று தசாப்த காலமாக மோசமான உள்நாட்டு யுத்தத்திற்கு முகங் கொடுத்த ஒருநாடாக விளங்குகின்றது. இந்த மூன்று தசாப்தகாலத்தில் இலங்கையின் அனைத்து மூலவளங்களும் சிதறடிக்கப்பட் டுள்ளன. தற்போது, வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுற்று ஒருதசாப்த காலம் பூர்த்தியாகியுள்ளது.

**தீர்வு காணப்படாத பிரச்னைகள்**

ஆயினும் ‘மழைவிட்டும் தூவானம் ஓயாதது’ போல, இலங்கை தொடர்ந்து அரசியல் ரீதியாக வடக்கு - கிழக்கில் பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளதோடு, யுத்தத்திற்கு பின்னரான மனிதாபிமான பிரச்னைகளுக்கும் தீர்வுகாணப்படாமல் இருப்பதையே காணக்கூடியதாக இருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைபேரவையில் இலங்கைமீதுகொண்டுவரப்பட்ட 46-1 பிரே ரணை பல்வேறு விதத்திலும் பொறுப்புக் கூறலை உறுதிசெய்யவேண்டியதன் அவசியத்தை எடுத்துக்கூறுவதோடு, நல்லிணக்கத்தையும் பலப்படுத்தவேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்துவதாகவும் இருக்கின்றது. ஆனால், இலங்கையரசு ஜெனிவா பிரேரணையை ‘மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயென்று’ தெரிவது போல கருத்து வெளியிட்டு வருகின்றது. இதன்மூலம் இலங்கையரசு தனது தலையில் தானே மண்ணைவாரி போடுவது போல நடந்துகொள்கின்றது.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இலங்கை ஓர் இறைமையுள்ள சுதந்திர நாடென்றும், ஆனால் இந்த இறைமையை பலவீனப்படுத்தவே ஐ. நா பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

**அரைவேக்காடான அறிவு**

வெளிவிவகார அமைச்சரின் வெளியுறவு சம்பந்தப்பட்ட அரைவேக்காடான அறிவையே இக் கருத்து வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. இலங்கைமீதான பிரேரணையை கொண்டுவந்துள்ள நாடுகள் இலங்கையில் யுத்தம் இடம்பெற்றபோது எவ்வகையிலும் இலங்கை பிரிந்து போவதற்கு இடமளித்திருக்கவில்லை. இலங்கையினுடைய இறைமையை, மற்றும் தன்னாதிக்கத்தை பலவீனப்படுத்துவதற்கு நிறையவே சந்தர்ப்பங்கள் பிரேரணையைக் கொண்டுவந்த நாடுகளுக்கு ஏற்பட்டிருந்தது. ஆயினும், இந்தியா உட்பட மேற்குலக நாடுகள் பலவும் இலங்கையில் பிரிவினைவாத போரை நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்ததோடு, இலங்கைக்கு ஆதரவாகவே தமது அரசியல் நகர்வுகளையும் மேற்கொண்டிருந்தன.

ஆனால் தற்போது யுத்தம் முடிவடைந்த தறுவாயில் இலங்கையில் பலவீனப்பட்டிருக்கின்ற அடிப்படை மனித உரிமைகள் மற்றும் இன நல்லுறவு என்பவற்றை பலப்படுத்தும் விதத்திலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவை, யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்து இலங்கைமீது பிரேரணைகளை கொண்டுவந்தவண்ணம் இருக்கின்றது. வெறுமனே பிரேரணைகளை கொண்டு வருவதோடு மாத்திரம் நின்றுவிடாது, அவற்றை அமுலாக்குவதில் கால அவகாசத்தை இலங்கையரசு கோரியபோது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவை பரந்த நோக்கோடு இலங்கையரசுக்கு அதனை வழங்கியிருந்தது. ஆனால், மனித உரிமைப் பேரவை மற்றும் சர்வதேச சமூகம் இலங்கை மீது காட்டிய பரிவினை இலங்கையரசு எவ்விதத்திலும் மதிக்காது நடந்துகொண்டிருப்பதையே காணமுடிகிறது.

இத்தடவை கொண்டுவரப்பட்டுள்ள பேரவையின் 46-1 பிரேரணை, இலங்கையை ஒருவழிப்படுத்தும் நோக்கில் அமைந்துள்ளது. குற்றவியல் விசாரணை இத்தடவை பிரேரணையில் உள்ளக்கப்பட்டுள்ளது. அத்துடன், யுத்த குற்றங்கள் குறித்த ஆதாரங்களையும் சேகரிப்பதற்கு இத்தடவை பிரேரணை வழியமைத்துள்ளது. ஏற்கனவே யுத்தக்குற்றங்கள் குறித்த ஆதாரங்கள் ஏராளமாகவே யுத்தம் இடம்பெற்ற இடங்களிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த ஆதாரங்கள் பல்வேறு வடிவத்திலும் காணப்படுகின்றன. இதுதவிர, காணாமல்போனோர், சரணடைந்தோர் குறித்து ஏராளமாகவே கண்கண்ட சாட்சியங்கள் இருந்துவருகின்றன. ஏற்கனவே இருக்கின்ற ஆதாரங்கள், சாட்சியங்கள் என்பவை, தற்போது சேகரிக்கப்படவுள்ள ஆதாரங்கள் மற்றும் சாட்சியங்களுக்கு வலுச்சேர்ப்பதாகவே அமைந்திருக்கும்.

ஜெனிவா பிரேரணையடுத்து இலங்கைப் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்கள் தென்னிலங்கை அரசியல்

(15ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் - 27 சனிக்கிழமை
சார்வரி வருடம் - பங்குனி - 14
நல்ல நேரம் : 7.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சதுர்த்தசி




## 27.03.2021

**மேடம்**
விருப்பங்கள் நிறைவேறி வெற்றி காணும் நாள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். திட்டமிட்ட பணிகளைச் செய்து முடிப்பீர்கள். முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**இடபம்**
நிம்மதி கூட நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். மறதி அதிகரிக்கும். அருகில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயம் உண்டு. பயணத்தால் விரயம் உண்டு.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள். தொலை தூரத்திலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் யோகம் உண்டு.

**கடகம்**
வளர்ச்சி கூடும் நாள். உங்கள் நிர்வாகத் திறமைக்கு பாராட்டுக் கிடைக்கும். உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். தொழிலில் எதிர்பாராத லாபம் உண்டு. புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிம்மம்**
வருமானம் உயரும் நாள். நண்பர்கள் உங்கள் பணிக்கு உறுதுணையாக இருப்பர். மறதியால் விட்டுப்போன காரியங்களைத் துரிதமாகச் செய்து முடிப்பீர்கள்.

**கன்னி**
வழக்குகளில் வெற்றி கிட்டும் நாள். சகோதர ஒற்றுமை பலப்படும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வரவும், செலவும் சமமாகும். உடன் பிறப்புகளின் உதவி கிட்டும்.

**துலாம்**
யோகமான நாள். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு. புதியவர்களின் சந்திப்பால் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்வீர்கள்.

**விருட்சிகம்**
கனவுகள் நனவாகும் நாள். தொழில் வளர்ச்சி மேலோங்கும். நண்பர்கள் நல்ல தகவலைத் தருவர். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

**தனுசு**
பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினை அகலும் நாள். பிரபலஸ்தர்களின் ஒத்துழைப்போடு நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோக உயர்வு உண்டு. கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**மகரம்**
கவனிக்காது விட்ட உடல்நலத்தால் கவலை அதிகரிக்கும் நாள். உடனிருப்பவர்களால் தொல்லை உண்டு. மனக்குழப்பம் அதிகரிக்கும். பிறருக்கு பொறுப்பு சொல்வதைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்**
பிரியமானவர்களைச் சந்தித்து மகிழும் நாள். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய வாகனத்தை மாற்றிப் புதிய வாகனம் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**மீனம்**
நாசூக்காகப் பேசி நல்ல பெயர் எடுக்கும் நாள். நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள். இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் வரலாம்.

# எந்த மதத்துக்குமே தி.மு.க எதிரானதல்ல

## கூறுகிறார் ஸ்டாலின்



திருச்சி, மார்ச் 27

**எந்த மதத்திற்கும் எதிரானது அல்ல திமுக என, அந்தக் கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று தேர்தல் பிரசாரப் பயணத்தின்போது, சிறிரங்கத்தில் பொதுமக்களிடையே உரையாற்றியதாவது:

'ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கையில் உறுதியாக உள்ளவர்கள் நாங்கள். அந்த கொள்கையின் அடிப்படையில், 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற குறிக்கோளைக் கொண்டு திமுக அரசிலும், அரசுக்கு வெளியில் இருந்தாலும் இயங்குபவர்கள் நாங்கள்.

எனவே, எந்த மதத்திற்கும் எதிரானது அல்ல தி.மு.க. என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். அதனால்தான் நம்முடைய தேர்தல் அறிக்கையிலேயே சமுதாய நல்லிணக்கத்தைப் பேணிப் பாதுகாத்து பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பாகுபாடின்றி இந்தியாவில் உள்ள அனைத்து மதங்களின் மாண்புகளையும் பாதுகாத்திடுவதே தி.மு.கவின் கடமை. அதன்படியேதான் நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகும் கடைப்பிடிப்போம். என்ன திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைப் பற்றி சொல்லும் ஆற்றல் பா.ஜ.க., அ.தி.முகவுக்கு இல்லை. காரணம் எதுவும் செய்யவில்லை.

மோடி முதன்முதலாக பிரதமராக வந்த நேரத்தில் பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்தார். அதில், ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை கொடுப்பேன் என்றார். கொடுத்தாரா? வெளிநாட்டில் பதுக்கி வைத்திருக்கும் கறுப்புப் பணத்தை மீட்டு, இந்தியாவில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் 15 லட்சம் வங்கியில் போடுவேன் என்றார். கொடுத்தாரா? விவசாயிகளின் வருமானத்தை 2 மடங்காக உயர்த்துவேன் என்று சொன்னார். உயர்த்தப்பட்டிருக்கிறதா?

எல்லோருக்கும் செல்போன் இலவசமாகக் கொடுப்பேன் என்று அதிமுக சொன்னது. கொடுத்தார்களா? பால் விலை லீற்றர் 25 ரூபாவுக்கு கொடுப்போம் என்று சொன்னார்கள். கொடுத்தார்களா? வேளாண் இடுபொருட்கள் அனைத்தும் இலவசம் என்று சொன்னார்கள். தந்தார்களா?

அந்த இரண்டு பேரும் ஜோடி போட்டுக்கொண்டு இந்தத் தேர்தலுக்கு வாக்குக் கேட்டு வருகிறார்கள். அவர்களை எல்லாம் வரும் ஆறாம் தேதி இந்த நாட்டை விட்டு விரட்டும் வகையில் திமுகவுக்கு மிகப் பெரிய வெற்றியைத் தேடித் தர வேண்டும்-என்றார்.



# குளித்தலையில் நண்பகல் வெயிலில் நடந்து சென்று ஸ்டாலின் பிரசாரம்

சென்னை, மார்ச் 27

கரூர் மாவட்டம் குளித்தலையில் நண்பகல் வெயிலில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நடந்து சென்று வாக்கு கேட்டார்.

கரூர் மாவட்டம் குளித்தலையில் நண்பகல் வெயிலில் நடந்து சென்று தி.மு.க. வேட்பாளர், முன்னாள் எம்.எல்.ஏ ரா.மாணிக்கத்திற்கு திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் வாக்குச் சேகரித்தார்.

கரூர் மாவட்டத்தில் உள்ள 4 தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து கரூரில் நேற்று மதியம் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் பிரசாரம் செய்கிறார். இதற்காக, திருச்சியில் பிரசாரத்தை முடித்துக்கொண்டு கரூருக்கு வந்த ஸ்டாலின், கரூர் மாவட்டம் குளித்தலை பேருந்து நிலையம் அருகே அவரது வாகனத்தில் இருந்து இறங்கி, திமுக வேட்பாளர் முன்னாள் எம்.எல்.ஏ., ரா.மாணிக்கத்தை ஆதரித்து நடந்து சென்று வாக்குச் சேகரித்தார்.

# சென்னையில் தபால் வாக்களிப்பு ஆரம்பம்!

சென்னை, மார்ச் 27

சட்டமன்றத் தேர்தலுக்கான தபால் வாக்கு பெறும் பணி சென்னையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த பணியை, அதிகாரிகள் 5 குழுக்களாக பிரிந்து முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில் அண்ணா நகர் தொகுதியில், 586பேர் வாக்களிக்க தகுதிப் பெற்றுள்ளனர்.

அதேபோன்று எழும்பூர் சட்டமன்ற தேர்தல் தொகுதியிலும் தபால் வாக்குகள் பெறப்படுகின்றன. இதில் 382 பேர் தபால் ஊடாக வாக்களிக்க தகுதிப் பெற்றுள்ளனர்.

# கி.வீரமணி பேசிய கூட்டத்தில் கல்வீச்சு

## இரா.முத்தரசன் கண்டனம்

சென்னை, மார்ச் 27

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி பேசிய பொதுக்கூட்டத்தில் கல்வீசப்பட்டதற்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, இரா. முத்தரசன் வெளியிட்ட அறிக்கையில்-

ஈரோடு மாவட்டம் கோபிச் செட்டிபாளையம் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் மணிமாறனை ஆதரித்து நம்பியூரில் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி பங்கேற்று பேசியுள்ளார்.

கூட்டம் நடந்து கொண்டிருந்த போது மர்ம கும்பல் ஒன்று திடீரென பொதுக்கூட்ட மேடையை நோக்கி கற்களை வீசி கலவரத்தில் ஈடுபட்டுள்ளது. இதில், மேடையின் கீழ்பகுதியில் நின்று கொண்டிருந்த திராவிடர் கழக இளைஞரணி மாவட்டச் செயலாளர் வெற்றிவேல் காயமடைந்துள்ளார்.

இத்தகைய வன்முறை செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிப்பதுடன் மர்ம கும்பலை கைது செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தேர்தல் ஆணையத்தை வலியுறுத்துகிறோம்-என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னாரில் நெல்லுக்கு நிர்ணய விலையில்லை

## விவசாயிகள் தொடர்ந்து பாதிப்பு

மன்னார், மார்ச் 27

இலங்கை தனியார் நெல் கொள்வனவு சந்தையில் நெல்லுக்கான நிர்ணய விலை இது வரை நிர்ணயிக்கப்படாமையால், அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து உலர்ந்த நிலையில் நெல் கொள்வனவு செய்வதால் தொடர்ச்சியாக தாங்கள் பாதிக்கப்படுவதாகவும் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்குவதாகவும் மன்னார் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இலங்கையின் நெல் நிரம்பல் சந்தையில் அதிகம் செல்வாக்கு செலுத்தும் மாவட்டங்களில் மன்னார் மாவட்டத்தின் பங்களிப்பு அதிகமாக காணப்பட்டாலும் இந்த மாவட்ட விவசாயிகளின் நெல் உற்பத்திக்கான விலை நிர்ணயத்தை அரசாங்கம் இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

தனியாருக்கு நெல்லை விற்பனை செய்ய வேண்டிய நிலை காணப்படுவதாகவும், பல்வேறு காலநிலை பிரச்னைகள், கால்நடை பிரச்னைகள், நீர்த் தட்டுப்பாடுகளைக் கடந்து முழுமைப்படுத்தப்படும் நெற் செய்கையை திருப்தியான விலைக்கு விற்பனை செய்ய முடியாத நிலையில் உள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை வெளியிட்டனர்.

இது ஒரு புறம் இருக்க அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்படுகின்ற நெல் காய்ந்த நிலையிலேயே கொள்வனவு செய்யப்படுவதனால் நெல்லை காய வைப்பதற்கு உரிய இடம் மன்னாரில் இல்லாததால் வீதி ஓரங்களில் நெல் காயவைப்பதாகவும் அவ்வாறு காய வைப்பதால் விபத்துக்கள் ஏற்படுவதுடன் இருக்கும் சுமைகளுடன் மேலதிக சுமைகளும் ஏற்படுவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டனர்.

பல வருடங்கள் நிர்ணய விலைக்கான கோரிக்கைகள் தங்களால் முன் வைக்கப்படுகின்ற போதிலும் நெல்லை காய வைப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் கோரப்படுகின்ற போதும் இதுவரை அவற்றுக்கான நடை முறை சாத்தியமான விடயங்கள் மேற்கொள்ளப்படவில்லை என விவசாயிகள் குற்றம்சுமத்தியுள்ளனர்.

எனவே, இவ்வாறான நிலை தொடர அரசாங்கம் அனுமதி வழங்கக் கூடாது எனவும் நெல்லுக்கான நிர்ணய விலையை விவசாயிகளுடன் அரச அதிகாரிகள் கலந்துரையாடி மேற்கொள்ள வேண்டும் எனவும் அதே நேரம் வலய ரீதியாக நெல்லை காய வைப்பதற்கான இடங்களையும் களஞ்சியப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை சம்மந்தப்பட்ட திணைக்களங்களும் அதிகாரிகளும் மேற்கொண்டு தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# அறிக்கைகளை மும்மொழிகளிலும் அச்சிடுவதால் பெருமளவு செலவு

## சபாநாயகர் மாற்றுத் திட்டம்

கொழும்பு, மார்ச் 27

பாராளுமன்ற அறிக்கைகளை மூன்று மொழிகளிலும் அச்சிடுவதற்கு பெருமளவு செலவு ஏற்படுவதனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் விரும்பும் மொழிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவற்றை அச்சிட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை மூன்று மொழிகளிலும் அச்சிட்டு வழங்க பெருமளவு செலவு ஏற்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டும். எனவே சபை உறுப்பினர்களின் மேசைகளில் அவர்கள் அறிக்கைகளைப் பெற விரும்பும் மொழி தொடர்பிலான விவரம் கோரும் படிவம் வைக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள் தாமதிக்காது அறிக்கைகளை எந்த மொழியில் தாம் பெற விரும்புகின்றோம் என்ற விவரத்தை பதிவு செய்து வழங்குமாறு கோருகின்றேன்.



இதன்மூலம் அறிக்கைகளை தேவையற்று மூன்று மொழிகளிலும் பெருமளவு அச்சிடுவதனைத் தவிர்த்து செலவுகளைக் குறைக்க முடியும்.

இது குறித்து சபையில் உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்ததுடன், இறுவெட்டுக்களில் தகவல்களை வழங்கும் செயல்பாடும் நிறுத்தப்படுமாயின் அதுவும் நல்லதொரு திட்டமாக அமையும், ஏனெனில் சூழலுக்கு இதனால் பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே, அறிக்கைகளை முடிந்தளவு இணைய வழிமுறை மூலமாகப் பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டத்தை முதன்மைப்படுத்தி செயல்பட கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ)

# புத்தூரில் மீண்டும் அகழ்வாராய்ச்சி!

## தொல்பொருள் திணைக்களம் விடாப்பிடி மக்கள் ஒன்று திரண்ட கடும் எதிர்ப்பு

**யாழ்ப்பாணம்,மார்ச் 27**

**யாழ்ப்பாணம் - வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக் குட்பட்ட புத்தூர் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தினரால் நேற்று அகழ்வாராய்ச்சிப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.**





இந்தப் பகுதியில் கடந்த மாதம் அகழ்வாராய்ச்சிப் பணிகள் இடம்பெற்ற போது எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதை யடுத்து அந்தப் பணிகள் நிறுத்தப்பட்ட நிலையில் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

இதனால் குறித்த பகுதியில் அதிகளவான மக்கள் ஒன்றுகூடி கடும் எதிர்ப்பு வெளியிட்டதை யடுத்து அங்கு குழப்பமான நிலை உருவாகியது. (எ)

# "ஜெனிவா தீர்மானத்தை முறியடிக்க எதிர்காலத்தில் ஒத்துழைப்போம்"

## 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றுமாறு அரசை வலியுறுத்துகின்றார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, மார்ச் 27

உள்ளக ரீதியில் காணப்படும் பலவீனமே இலங்கை மீதான சர்வதேச தலையீடுகளுக்குக் காரணம் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இனிவரும் ஜெனிவா அமர்வில், இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்கள் கொண்டுவரப்படால், அவை நிறைவேற்றப்படாமல் முறியடிப்பதற்குத் தாமும் ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் கூறினார்.

அத்துடன், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு 'மைனஸ்' காட்டுபவர்கள், சர்வதேசத்திடம் "13 ப்ளஸ்" எனக் கூறுகின்றனர் என்றும் 13ஆவது திருத்தத்தை உள்ளவாறே நடைமுறைப்படுத்தி, ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்துரைத்த அவர் தெரிவித்தவை வருமாறு:

"இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு 22 நாடுகள் ஆதரவாகவும் 11 நாடுகள் எதிராகவும் வாக்களித்துள்ளதுடன், 14 நாடுகள் வாக்களிப்பில் இருந்து விலகிக் கொண்டுள்ள நிலையில், எதிராக வாக்களித்த நாடுகளையும் விலகிகொண்ட நாடுகளையும் இணைத்து, மொத்தமாக 25 நாடுகள் இலங்கைக்குச் சார்பாக வாக்களித்துள்ளன என்று, அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார் எனவும் இந்தக் கணக்கு, சிறு பிள்ளைத்தனமாக உள்ளதெனவும் கூறினார்.

தினேஷின் இந்தக் கணக்குபடி பார்த்தால், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காத மக்களையும் இணைத்து கணக்கிட்டுப் பார்த்தால், நான் தான் இன்று ஜனாதிபதியாக வந்திருப்பேன். விரும்பியோ விரும்பாமலோ, பிரேரணைக்கு பெரும்பான்மையாக ஆதரவு வாக்குகளே கிடைத்துள்ளன என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இலங்கையில் காணப்படும் சர்வதேசக் கொள்கை காரணமாகவே, எமக்குச் சார்பாக இருந்த நாடுகள் இந்தப் பிரே ரணைக்கு ஆதரவாகச் செயற்பட்டதுடன், விலகியும் கொண்டன.

இந்தப் பிரேரணை உள்ளடக்கத்தில் 85 சதவீதமானவை, கோட்டாபய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஜனநாயக விரோதச் செயற்பாடுகளாகவே காணப்படுகின்றன. அத்துடன், இந்தப் பிரேரணை தோல்வியடைவதற்கு, இலங்கையில் காணப்படும் இன, மதவாதம், தீவிரவாதச் செயற்பாடுகள், நாட்டு மக்களிடையே அமைதியின்மை மற்றும் நல்லிணக்கமின்மை என்பனவே காரணங்களாகும்.

மஹிந்த ராஜபக்ஷ கொண்டுவந்த எல்எல்ஆர்சி, பரணகம விதப்புரைகளை நடைமுறைப்படுத்தி இருந்தால், இன்று இலங்கை இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்காது. உண்மையில், உள்நாட்டு விவகாரங்களில சர்வதேசத் தலையீடு இருப்பதில் எமக்கு விருப்பம் இல்லை. உள்ளக ரீதியில் உங்களில் காணப்படும் பலவீனம் காரணமாகவே, சர்வதேச தலையீடு காணப்படுகிறது. இதை நாம் முறியடிக்கவேண்டும். உள்நாட்டு விடயங்களை உள்நாட்டுக்குள்ளேயே தீர்த்துக்கொள்வதாக இருந்தால், இதற்கான ஒத்துழைப்பை நாம் வழங்குவோம். ஆனால், அதில் எவ்வித அரசியல் தலையீடு இன்றி, நியாயமான முறையில் அதன் செயற்பாடுகள் அமைய வேண்டும்" எனவும் தெரிவித்தார்.

# நாம் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்!

## கரு ஜெயசூரிய வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 27

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில், நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்றும் ஜனநாயக நாடொன்றாக மீண்டெழ வேண்டும் என்றும் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவரது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவாவில் இலங்கை குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது ஒரே நாட்டவர் என்ற வகையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல் படவேண்டும்.



அதேவேளை நாட்டுமக்களின் நலனைக் கருத் தில்கொண்டு ஏதேனும் குறைகள் மற்றும் விடு பாடுகள் இருப்பின், அவை தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும்.

உண்மையான ஜனநாயக நாடொன்றாக நாம் மீண்டெழ வேண்டும். ஏனெனில் ஒருபோதும் நாம் தனித்து செயல்பட முடியாது என்று அப் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை, ஆண்டான்குளம் மக்கள் மீள்குடியேற அனுமதி மறுப்பு!

## வனஜீவராசிகள் திணைக்களம் அச்சுறுத்தல்?





முல்லைத்தீவு, மார்ச் 27

முல்லைத்தீவு குமுழமுனை ஆண்டான்குளம் கிராமத்தைச் சேர்ந்த ஒருவரை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

தமது பூர்வீகக் காணிகளில் அபிவிருத்தி வேலைகளை செய்து குடியேறுவதற்கான ஏற்பாடுகளை கிராம மக்கள் மேற்கொண்டு வந்தநிலையில், வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மக்களுக்குத் தடை ஏற்படுத்தியுள்ளதோடு குடும்பப் பெண்ணொருவரை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி தாக்க முற்பட்டதோடு ஒருவரைக் கைது செய்து வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட குடும்பஸ்தரின் மனைவி நடந்த சம்பவத்தை பற்றி இவ்வாறு கூறினார்:


கடந்த 1984 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் தமது கிராமத்தை விட்டு குமுழமுனை ஆண்டான்குளம் கிராம மக்கள் விரட்டி அடிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் 30 வருடங்களுக்கும் மேலாக வசித்து வந்த நிலையில் மீண்டும் போருக்குப் பின்னர் எமது கிராமம் மீள்குடியேற்றம் செய்த போதிலும் அங்கு சென்று குடியேறவோ தற்காலிக வீடுகளை அமைக்கவோ இராணுவத்தினர், வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தடைகளை ஏற்படுத்தி வந்தனர்.

இருந்த போதிலும் எமது சொந்த பூர்வீக கிராமத்துக்குச் சென்று காணிகளைச் சுத்தம் செய்து தற்காலிகமாக வீடுகளை அமைத்து குடியேற தற்போது தயாராகி வந்த நிலையில் இராணுவம், வனஜீவராசிகள் திணைக்களம் இணைந்து எமக்கு தடைகளை விதித்து எனது கணவரை பலவந்தமாக கைது செய்து கொண்டு சென்று வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இராணுவம், பொலிஸ், வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் வருகைதந்து காணியில் வேளைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த எம்மை அச்சுறுத்தி கட்டாயமாக தற்காலிக வீட்டின் உள்ளே இருந்த பொருள்களை எடுத்து சென்றதோடு எனது கணவரையும் இன்னொருவரையும் கைது செய்து கொண்டு சென்றனர்.

இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் நேற்று அப்பகுதிக்கு வருகைதந்த கரைதுறைப்பற்று காணிப்பகுதி அதிகாரிகள் எதிர்வரும் 14 நாள்களுக்கு எந்த விதமான அபிவிருத்தி வேலைகளிலும் கிராம மக்களை ஈடுபடவேண்டாம் எனவும் இங்கு மக்களின் காணிகள் தொடர்பில் அடையாளம் காண்பித்த பின்னர் வேலைகளை செய்யலாம் எனக்கூறி சென்றுள்ளனர் என கிராம மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்று குறித்த பகுதிக்கு வருகைதந்த இராணுவத்தினர், பொலிஸார், புலனாய்வாளர்கள் மக்களின் ஆவணங்களை வாங்கி பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டதோடு மேலதிக விவரங்களையும் பதிவு செய்துகொண்டனர். (எ)



# தபால் பொதிகள் ஊடாக போதைப்பொருள் கடத்தல்

## 4000 போதை மாத்திரைகள் மீட்பு

கொழும்பு, மார்ச் 27

டுபாய் மற்றும் பிரான்ஸிலிருந்து தபால் பொதியூடாக இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ள 4000 இற்கும் அதிகமான போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா உள்ளிட்ட வெவ்வேறு போதைப்பொருள்கள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டன என பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த 2020 டிசெம்பர் 26 ஆம் திகதி விமானத்தினூடாக டுபாயிலிருந்து இலங்கைக்கு பொதியொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பொதியை அனுப்பியவர் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்த பெயர் போலியானது என்று விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தப் பொதியை பெற்றுக் கொள்ள உரித்துடையவர் அதனைப் பெற வரவில்லை என்பதோடு, ஆரம்பத்திலிருந்தே இப்பொதி சந்தேகத்துக்குரியதாகக் காணப்பட்டது. இதற்கமைய அதனைச் சோதனை செய்த போது அதிலிருந்து கஞ்சா, மிஷ்ர மற்றும் குஷ் உள்ளிட்ட போதைப்பொருள்கள் 26 கிராமும், குஷ் எண்ணெய் 28 கிராமும் கைப்பற்றப்பட்டன.

இதேபோன்று ஜனவரி 4 ஆம் திகதி பிரான்ஸிலிருந்து டுபாய் ஊடாக பொதியொன்று அனுப்பி வைக்கப்பட்டது.

அந்தப் பொதியிலிருந்து 4962 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. இந்தப் பொதியும் போலியான பெயர் குறிப்பிடப்பட்டே அனுப்பி வைக்கப்பட்டது.

இவ்வாறு போலியான பெயர்களைக் குறிப்பிட்டு வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பொதிகளை போலியான ஆவணங்களைக் காண்பித்து பெற்றுக்கொள்ளும் வியாபாரம் முன்னெடுக்கப்படுகின்றமை தெரியவந்தது.

இவ்வாறு போலியான பெயர்களில் போதைப்பொருள்கள் அடங்கிய பொதியை அனுப்பிய நபர்கள் தொடர்பிலும், யாருக்கு அனுப்பப்பட்டது என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன- என்றார். (எ)

# சுகாதார ஸ்தாபனம் அங்கீகரிக்காத தடுப்பூசிகள் மக்களுக்கு வழங்கல்!

## குற்றஞ்சாட்டுகின்றார் ஏரான் விக்கிரமரத்ன



கொழும்பு, மார்ச் 27

கொவிட் தடுப்பூசி வழங்கும் செயன்முறையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதியற்ற தடுப்பூசிகளை பொது மக்களுக்கு வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். இங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

"கொவிட் தடுப்பூசி வழங்கும் செயன்முறையின் போது உயர்ந்த தரத்திலான தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். ஆனால் அரசியல்வாதிகளுக்கும் வைத்தியத் துறைசார்ந்தவர்களுக்குமே உயர்ந்த தரத்திலான கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகரிக்காத தடுப் பூசிகளை வழங்கும் நடவடிக்கையே மேற்கொள்ளப்படுகின்றது. இதனை வழங்குவதனை எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது.

அதேபோல் சிங்கராஜவனம் என்பது எம்முடைய உரிமை மாத்திரமல்ல மாறாக உலக உரிமையாகும். ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு இதனை சர்வ தேச உரிமையாக பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த வளங் களை பாதுகாக்கும் வகையிலான அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டிருந்தார். அதன் ஊடாக இந்த வனப்பகுதிகள் பாதுகாக்கப்பட்டன. ஆனால் கடந்த ஒன்றரை வருடத்தை நோக்கும் போது அவ்வாறானதொரு நிலைமை அற்றுப்போயுள்ளமையை அவதானிக்க முடிகின்றது." - என்றார்.

அளுத்கம, பேருவளை வன்முறை:

# அடிப்படை உரிமை மீறல் மனு: செப்ரெம்பர் வரை ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 27

அளுத்கம, பேருவளை உள்ளிட்ட பொலிஸ் பிரிவுகளில் பதிவான இனவாத வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட 5 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான வாதங்களை எதிர்வரும் செப்ரெம்பர் 23 ஆம் திகதிக்கு உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது.

கடந்த 2014 ஜூன் 15 ஆம் திகதி அதிகாரிகொட, வெலிபிட்டிய, சீனன்வத்த, துந்துவ, பேருவளை, வெலிப்பன்னை உள்ளிட்ட பகுதிகளில் முஸ்லிம்களை இலக்கு வைத்து வன்முறைச் சம்பவங்கள் பதிவாகின.

இந்த வன்முறைகளைக் கட்டுப்படுத்த பொலிஸார் தவறியதால் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும், வன்முறைகளுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மனுவின் பிரதிவாதிகளாக அப்போதைய பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோன், அப்போதைய மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்க, அப்போதைய பொலிஸ் விஷேட அதிரடிப் படை கட்டளைத் தளபதி பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆர். டபிள்யூ.சி.என். ரணவன, அபோதைய சட்டம் ஒழுங்கு செயலர் மேஜர் ஜெனரல் நந்த மல்லவஆரச்சி, சட்டமா அதிபர், பின்னர் நியமிக்கப்பட்ட பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர உள்ளிட்ட 9 பேர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டனர்.

இந்த வன்முறை காரணமாக 48 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும், இருவர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டதாகவும், 80 பேர் படுகாயமடைந்ததாகவும் (சூட்டுக் காயங்கள் உட்பட), 17 பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், 2248 முஸ்லிம்கள் உள்ளூரில் இடம்பெயர்ந்ததாகவும், 79 முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் சேதமாக்கப்பட்டதாகவும் (17 வர்த்தக நிலையங்கள் முற்றாக அழிப்பு) மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலுக்கு ஒவ்வாத தேங்காய் எண்ணெய் சந்தைக்கு விநியோகிக்க தடை உத்தரவு

## சபையில் கூறினார் அமைச்சர் பந்துல

கொழும்பு, மார்ச் 27

மனித ஆகாரத்துக்குப் பொருத்தமில்லாத 13 கொள்கலன்களில் வந்த தேங்காய் எண்ணெய் தொடர்பில் விசாரணை இடம்பெற்று வருகின்றது. இதுவரை அவற்றை நாட்டுக்குள் (சந்தைக்கு) விநியோகிப்பதை தடைசெய்திருக்கின்றோம் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று விஷேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு, மனித உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும், நச்சுத்தன்மை கலந்த தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுவதாக செய்தி வெளியிடப்பட்டு வருகின்றது. இதுதொடர்பில் பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களின் சங்கம் மாத்தளை பிரதேசத்தில் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தது. அதில் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாகவும் அதனை நாட்டுக்குள் விநியோகிக்க நடவடிக்கை எடுத்துவருவதாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

குறித்த சர்ச்சைக்குரிய கருத்து வெளியிடப்பட்டு மறு நாள் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளைச் சந்தித்து, இதுதொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டேன். தற்போது விசாரணை இடம்பெற்று வருகின்றது. அத்துடன் இறக்குமதி செய்யப்படும் அனைத்துவகையான ஆகார வகைகளும் தர நிர்ணய நிறுவனம் மற்றும் சுகாதார அமைச்சின் உணவு பாதுகாப்புப் பிரிவில் பரிசோதிக்கப்பட்ட பின்னரே அதனை நுகர்வோருக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அதனடிப்படையில், இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் தர நிர்ணய நிறுவனம் மற்றும் உணவு பாதுகாப்புப் பிரிவுக்கு அனுப்பப்பட்டது. அதில் சுகாதார அமைச்சின் அறிக்கையில், 13 கொள்கலன்களில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் தேங்காய் எண்ணெய் மனித ஆகாரத்துக்கு பொருத்தமில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் அதனை மீள் ஏற்றுமதி செய்யுமாறு உத்தரவிட்டிருப்பதாக சுங்க திணைக்களப் பணிப்பாளர் எமக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

அத்துடன் இந்த தேங்காய் எண்ணெய் தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையும் விசாரணை மேற்கொண்டு வருகின்றது. அவர்களது விசாரணை அறிக்கை கிடைக்கும் வரை குறித்த தேங்காய் எண்ணெய் தொகையை தற்போது களஞ்சியப்படுத்தி இருக்கின்றோம். அந்தத் தேங்காய் எண்ணெய் நுகர்வோர் பெற்றுக்கொள்ளும் வகையில் விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுவதில் எந்த உண்மையும் இல்லை- என்றார். (எ)

# முன்பள்ளி கல்வி தொடர்பில் விரைவில் தேசிய கொள்கை



கொழும்பு, மார்ச் 27

முன்பள்ளி கல்வி தொடர்பான தேசிய கொள்கையொன்று வகுக்கப்பட்டுள்ளது என மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்தார்.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் சர்வதேச தரத்திலான முன்பள்ளிப் பாடசாலையை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை. முன்பள்ளி மாணவர்களின் சுகாதாரத்தை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முன்பள்ளி கற்றல் நடவடிக்கை தொடர்பான வரைபு கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளி கல்வி நடவடிக்கைகளை முறை சார்ந்ததாக மேற்கொள்ளும் தேசிய கொள்கையொன்று இதுவரையிலும் இருந்ததில்லை.

எனவே முறை சார்ந்த கொள்கையானது நிபுணர் குழுவொன்றின் மூலம் வகுக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து முன்பள்ளிப் பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதற்கான வேலைத்திட்டங்கள் பல ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் குறைந்தது தரமான பாலர் பாடசாலையொன்றையாவது ஆரம்பிப்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

அவை சர்வதேச தரத்துக்கமைவாக நடத்தப்படும். பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு கொடுப்பனவொன்றை வழங்கவும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ)

# தாக்குதலொன்று இடம்பெறலாம் என எம்.பி.க்களுக்கு முன்னரே எச்சரிக்கை

## உயித்த ஞாயிறு தாக்குதல் விவாதத்தில் குமார வெல்கம

கொழும்பு, மார்ச் 27

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

தாக்குதலொன்று இடம்பெறலாம் என தனது தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் முன்கூட்டியே எச்சரித்தார் என அவர் குறிப்பிட்டுள்ளார். உயிர்த்த ஞயிறு தாக்குதல் விசாரணை அறிக்கை குறித்த விவாதத்தில் பங்கு கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தாக்குதல் இடம்பெற்று மூன்று நாட்களின் பின்னர் ஏப்பிரல்24 ம் திகதி நான் இது குறித்து நாடாளுமன்றில் தெரிவித்தேன் என அவர் தெரிவித்துள்ளார். உயிர்த்தஞாயிறு தாக்குதல் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கப்பட்டது என தெரிவித்துள்ள குமார் வெல்கம தங்களிற்கு முன்கூட்டிய எச்சரிக்கை கிடைக்கவில்லை என எவரும் தெரிவிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

# இயற்கை சூழலைப் பாதுகாக்க வலுவான செயல்திட்டம் தேவை!

## முன்னாள் பிரதமர் ரணில் களத்தில்



கொழும்பு, மார்ச் 27

உலக மரபுரிமையான சிங்கராஜவனம், ஈரநிலங்கள் மற்றும் ஈரவலயக் காடுகள் உள்ளிட்ட இயற்கை சூழலைப் பாதுகாப்பதற்கு அவசியமான வலுவான சட்டதிட்டங்கள் உள்ளடங்கிய முழுமையான செயல்திட்டமொன்றை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரசிங்க முன்வைக்கவுள்ளார்.

இதற்கமைய இலங்கை பரீட்சைகள் திணைக்களத்ததைப் போன்று அரசியல் அல்லது வேறு எந்தவொரு அழுத்தத்துக்கும் அடிபணியாத அதிகபடியான அதிகாரங்களையுடைய சுயாதீனமான திணைக்களமொன்றின் கீழ் இலங்கையிலுள்ள வனங்களை உள்ளடக்கும் வகையிலான வழிமுறையைகொள்கை ரீதியான தீர்மானமாக அவர் முன்வைக்கவுள்ளார்.

கொழும்பில் அவரது இல்லத்தில் கட்சி உறுப்பினர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதன்போது வனங்கள் மற்றும் ஏனைய இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதற்கு சூழலியலாளர்கள் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களுக்கு இவ்வாறானதொரு திணைக்களத்தை நிறுவுவதன் மூலம் அதிக அதிகாரங்கள் கிடைக்கப்பெறும் என்று ஐ.தே.க. பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைப் பிரகடனத்தில் இந்தச் செயல்திட்டத்தை உள்ளடக்குவதோடு, சகல தொகுதிகளிலும் 5 - 10 ஏக்கர் நிலப்பரப்பில் சிறிய காடுகளை உருவாக்குவதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்து குறித்த திணைக்களத்தின் கீழ் அவற்றை நிர்வகிப்பதற்கான வேலைத்திட்டமும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரம சிங்கவால் வெளியிடப்படவுள்ளது.(எ)

# தனியார் வைத்தியசாலையில் இந்தியப் பெண்கள் மரணம்!

## விஷேட விசாரணையில் சி.சி.டி.

கொழும்பு, மார்ச் 27

சுற்றுலா விசாவில் இலங்கை வந்த இந்தியர்கள், சட்டவிரோதமாக சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை மற்றும் சிறுநீரக தானங்களை முன்னெடுத்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சி.சி.டி. எனும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு விஷேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த விசாரணைப் பிரிவு கொழும்பு மேலதிக நீதிவான் ரஜீந்ரா ஜெயசூரியவுக்கு விஷேட அறிக்கையையும் சமர்ப்பித்தது.

கொழும்பில் இரு தனியார் வைத்தியசாலைகளில் இந்தியப் பெண்கள் இருவர் திடீரென உயிரிழந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், அவர்கள் சிறுநீரக தானத்தின் போது உயிரிழந்தனர் என்பதை கண்டறிய விசாரணை நடத்துமாறு இந்திய உயர்ஸ்தானிகராலயம் கோரியிருந்தது.

கடந்த 2020 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கைக்கு அமைய விஷேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

கடந்த 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாத காலப் பகுதியிலேயே இரு இந்தியப் பெண்கள் இவ்வாறு உயிரிழந்தனர்.

அவர்களின் மரணத்துக்கு சிறுநீரக மாற்று சிகிச்சை அல்லது சிறுநீரக தானமாக இருக்கலாம் என தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளதாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் இரு இந்தியர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்கள் தொடர்பிலும் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்குமாறும் உயர்ஸ்தானிகராலயம் அறிவித்திருந்ததாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் நீதிமன்றுக்கு தெரிவித்தனர்.

உயிரிழந்த இரு இந்திய பெண்களினதும் சடலங்கள் இந்தியாவுக்கு எடுத்து செல்லப்பட்டு அவர்களது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது அவர்கள் இலங்கையின் குறித்த வைத்தியசாலைகளில் எதற்காக சிகிச்சை பெற்றனர் என்பது தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீதிவானுக்கு அறிவிக்கப்பட்டது.

இதன்படி இந்தப் பெண்கள், குறித்த வைத்தியசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்டமை எதற்காக, பெற்றுக்கொண்ட சிகிச்சைகள் எவை, மரணத்துக்கான காரணம் என்ன? என்பவை உள்ளிட்ட முழுமையான அறிக்கையொன்றை சி.சி.டி.யினருக்கு வழங்க குறித்த வைத்தியசாலைகளுக்கு உத்தரவிடுமாறு பொலிஸார் நீதிமன்றைக் கோரினர்.

இதனை ஆராய்ந்த மேலதிக நீதிவான் ரஜீந்ரா ஜயசூரிய, சி.சி.டி. கோரும் அனைத்துத் தகவல்களையும் வழங்குமாறு குறித்த வைத்தியசாலைகளுக்கு உத்தரவிட்டார். அத்துடன், விசாரணைகளை முன்னெடுத்து மேலதிக விடயங்களை தெரியப்படுத்துமாறும் அவர் பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க தேர்தல் அறிக்கையில் குளறுபடிகளா?

ஆ. விஜயானந்த்
பிபிசி தமிழுக்காக

தி.மு.க தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டு 10 நாட்கள் கடந்த பின்னரும் அது தொடர்பான சர்ச்சைகள் ஓய்வதாக இல்லை. “அவசர கோலத்தில் இப்படியொரு தேர்தல் அறிக்கையை ஏன் தயாரிக்க வேண்டும்?” எனவும் அரசியல் நோக்கர்கள் கேள்வி எழுப்பு கின்றனர். என்ன நடந்தது?

தமிழக சட்டப்பேரவை தேர்தலை யொட்டி தி.மு.கவும் அ.தி.மு.கவும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. ஒவ்வொரு தேர்தலிலும் மக்களைக் கவ ரும் வகையில் புதிய, புதிய வாக்குறுதி களை தேர்தல் அறிக்கையில் இடம் பெறச் செய்வது அரசியல் கட்சிகளின் வழக்கம். ஆட்சிக்கு வரவே வாய்ப்பில் லாத சிறிய கட்சிகளும் தங்களின் வாக்கு றுதிகளை தேர்தல் அறிக்கையாக வெளி யிடுகின்றன. ஆனாலும், ‘தி.மு.க. என்ன சொல்லியிருக்கிறது?’ ‘அ.தி.மு.க என்ன சொல்லப் போகிறது?’ என்ற எதிர்பார்ப் புகளுக்கு பஞ்சமில்லை.

**தங்கக் காசு அஸ்திரம்**

இதன் ஒரு பகுதியாக மார்ச் 7ஆம் திகதி திருச்சி மாநாட்டில் பேசிய தி.மு.க தலைவர் ஸ்டாலின், குடும்பத் தலைவி களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் தருவதாக ஓர் அறிவிப்பை வெளியிட்டார். இதற்கு அடுத்தநாளே, “எங்களின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்த தகவல் கள் வெளியில் கசிந்து விட்டன. நாங்கள் முதம் 1,500 ரூபாவும் ஆண்டுக்கு ஆறு சிலிண்டர்களும் தருவோம்” என முதல் வர் எடப்பாடி பழனிசாமி அறிவித்தார். அந்தளவுக்கு இரண்டு கட்சிகளும் தேர்தல் அறிக்கையை மிக முக்கியமான தாகப் பார்த்தன.

இந்நிலையில், மார்ச் 13ஆம் திகதி தி.மு.க தலைமை தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையில், எட்டுவழிச்சாலை திட்டம், சி.ஏ.ஏ விவ காரம், காட்டுப்பள்ளி துறைமுக விவகாரம் போன்றவை இடம்பெறாத தால், இது குறித்து தி.மு.க தலைமையின் கவனத்துக்கு சிலர் கொண்டு சென்றனர். இதையடுத்து, ‘திருத்தப்பட்ட தேர்தல் அறிக்கை’ என்ற பெயரில் இந்த விவ காரங்களை தி.மு.க தலைமை இடம் பெறச் செய்தது. ஆனாலும், ‘கலப்பு மணம் செய்தால் ரூ. 60,000 மற்றும் ஒரு பவுண் தங்கக்காசு’ என்பன போன்ற வாக்குறுதிகளை தி.மு.கவுக்கு எதிரான ஆயுதமாக சில அரசியல் கட்சிகள் பயன் படுத்தத் தொடங்கின.

**மாற்றுத் திறனாளிகளின் வேதனை**

இதனைத் தொடர்ந்து, மாற்றுத் திற னாளிகள் சிலர் எழுப்பிய கேள்விகளும் விவாதப் பொருளானது. இது குறித்து பேராசிரியர் தீபக் என்பவர் வெளியிட்டி ருந்த முகநூல் பதிவில், தி.மு.கவின் தேர்தல் அறிக்கை, மாற்றுத்திறனாளி களுக்கு கடும் வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது. உதாரணமாக, ‘புதிய ஸ்மார்ட் கார்டு’. ஏற்கனவே ஒரு ஸ்மார்ட் கார்டு உள்ளதே.. இயலாமையை மீண்டும் மீண்டும் நிரூபிக்க வைப்பது எங்கள் மீது ஒருவிதமான தாக்குதலாகாதா? மாற்றுத் திறனாளிகள் உரிமை சட்டம் 2016 நடை முறைக்கு வந்து 4 ஆண்டுகள் முடிவ டைந்துள்ள நிலையில், காலாவதியான 1995 ஊனமுற்றோர் சட்டத்தை அமுல் படுத்துவோம் என்று சொல்வதை எங்க ளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நவீன கால சமூக நீதி கோட்பாட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான அதிகார



மளித்தல் வருகிறதே. அவ்வாறு இருக் கையில், மாற்றுத்திறனாளிகளுக்கான உள்ளாட்சி இட ஒதுக்கீடு என்பதை பற்றி ஒரு வார்த்தை கூட இல்லாததை ஏற்க முடியவில்லை. எத்தனையோ கூட் டங்கள் போட்டு பேசி எங்கள் கோரிக் கைகளை வடிவமைத்து தந்தோம். ஆனால் அது முழுமையாக புறந்தள்ளப் பட்டுள்ளது எங்களுக்கு மனவலியை தந்திருக்கிறது என பதிவிட்டிருந்தார்.

**அச்சுப் பணியில் அவசரம் ஏன்?**

“ஏன் இவ்வளவு குளறுபடிகள்?” என தி.மு.கவின் முன்னணி நிர்வாகி ஒருவரி டம் பேசியபோது, “எங்கள் கட்சி யின் தேர்தல் அறிக்கைக் குழுவானது, மாநிலம் முழுவதும் ஐந்து கட்டங்களாகப் பய ணித்து மக்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தது. இந்தக் குழுவில் டி.ஆர். பாலு, கனிமொழி, சுப்புலட்சுமி ஜெக தீசன், ஆ.ராசா, டி.கே.எஸ்.இளங்கோவன், பேராசிரியர் ராமசாமி உள்ளிட்டோர் இருந்தனர். தேர்தல் அறிக்கை தயாரிப் பின்போது, பல்வேறு துறை நிபுணர்களி டம் இந்தக் குழுவினர் கலந்து ஆலோசித் தனர். ஐபேக் குழுவினரும் தங்கள் பங்குக்கு களநிலவரத்தில் கிடைத்த தகவல்களை தெரியப்படுத்தினர். கடைசி நிமிடம் வரையில் என்னென்ன கோரிக் கைகள் இடம்பெற வேண்டும் எனத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின ரிடம் தி.மு.க தலைமை பேசி வந்தது. ஆனால், கடைசி ஓரிரு நாள்களில் குழுவில் உள்ள சிலருக்கே தெரியாமல் அச்சடித்துவிட்டனர்” என்கிறார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், “தேர்தல் அறிக்கையை அச்சுக்கு அனுப்பு வதற்கு முன்பாக, குழுவின் உறுப்பினர் களுக்குக் காட்டியிருந்தால் அதில் திருத்தங்களை மேற்கொள்ள வசதியாக இருந்திருக்கும். அவ்வாறு செய்யாமல் டி.ஆர்.பாலு, டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகிய இருவரை மட்டுமே வைத்து அறிக்கையைத் தயார் செய்து முடித்து விட்டனர். இதனால் அதிருப்தியடைந்த குழுவின் மூத்த உறுப்பினர் ஒருவர், “என்னிடம் காட்டியிருக்கலாமே.. ஏன் இவ்வளவு அவசரம்?” என வேதனையை வெளிப்படுத்தினார். இந்த அறிக்கை உரு வாக்கத்தில் பணிபுரிந்த வல்லுநர் ஒருவ ரும், “சில விடயங்கள் இடம்பெறவில்லை. அதனை சரிசெய்துவிட்டு அச்சுக்கு அனுப் புங்கள்” எனக் கூறியதையும் அறிவாலயத் தில் உள்ளவர்கள் ஏற்க வில்லை. இது விமர்சனத்தை ஏற்படுத் தவே, மறுநாள் திருத்தப்பட்ட தேர்தல் அறிக்கையை ஸ்டாலின் வெளியிட்டார்” என்கிறார்.

**பா.ஜ.க அழுத்தம் கொடுத்ததா?**

“காட்டுப்பள்ளி துறைமுக விரிவாக்க விவகாரம் தற்போது பேசப்பட்டு வருகி றது. இதனை தி.மு.கவின் கவனத்துக்கு உள்ளூர் கட்சி நிர்வாகிகள் கொண்டு சேர்த்திருக்கலாம். ஆனால், தொடக்கத் தில் அதனை அவர்கள் சேர்க்கவில்லை. இந்தக் கோரிக்கை விடுபட்டதைக்கூட விட்டுவிடலாம். ஆனால், எட்டுவழிச் சாலை, சி.ஏ.ஏ விவகாரங்கள் விடுபடவே முடியாத அடிநாதமான விஷயங்களாகத் தான் பார்க்கிறேன். இதனை தேர்தல் அறிக்கையில் தி.மு.க தவிர்த்ததை சாதா ரணமான ஒன்றாகப் பார்க்க முடிய வில்லை. பா.ஜ.கவின் அழுத்தம் காரண மாக அமைதியாக இருந்துவிட்டார்களா என்ற சந்தேகமும் எழுகிறது. தேர்தல் அறிக்கையை தி.மு.க திருத்திவிட்டா லும், அவர்கள் மீதான சந்தேகம் அகலவில்லை” என்கிறார் மூத்த பத்திரி கையாளர் சாவித்ரி கண்ணன்.

இது குறித்து தொடர்ந்து பேசிய அவர், “தி.மு.கவின் தேர்தல் அறிக் கையை கதாநாயகன் என்றெல்லாம் வர்ணிக்கிறார்கள். அவர்களின் தேர்தல் அறிக்கை எப்போதுமே கதாநாயகனாக இருந்ததில்லை. தொலைக்காட்சிப் பெட்டியையும் ரேசன் அரிசியை 2 ரூபாய்க்கு கொடுப்பதாக கலைஞர் அறிவித்ததையும் ‘கதாநாயகன்’ என வர்ணித்தார்கள். அதனால், இந்தச் சமூ கத்துக்கு எந்தவித முன்னேற்றமோ வளர்ச்சியோ ஏற்படவில்லை. அது அந்தநேரத்தில் மக்களைக் கவர்வதற்கான தேர்தல் அறிக்கையாகத்தான் இருந்தது. மக்களிடம் ஒன்றைக் கொடுப்பதன் மூலம், அவர்களுக்கு இயல்பாகச் சென்று சேர வேண்டிய கல்வி, மருத்துவ நிதிக்கான பணத்தை இலவசங்களை நோக்கித் திருப்ப முடியும். தேர்தல் அறிக்கையை கதாநாயகன் என்று வர்ணிப்பதே பாமரத்தனமாக இருக்கி றது” என்கிறார்.



**மதுவை மறந்தது ஏன்?**

மேலும், ஹஹகலப்பு மணம் செய் தால் 65 ஆயிரம் ரூபா என்பது தி.மு. கவுக்கு எதிரான சில அரசியல் கட்சிக ளின் லொபியால் வெளியில் வந்த விட யம். இது திட்டமிட்டே தவறாகப் பிர சாரம் செய்யப்பட்டுவிட்டது. வன்னியர் களுக்கு 10.5 சதவிகிதம் கொடுக்கப்பட்ட தால், மற்ற சமூகங்களை தி.மு.கவுக்கு எதிரானதாக மாற்றுவதற்காக இந்த வாக்குறுதியைக் கையில் எடுத்தனர். தி.மு.க தனது தேர்தல் அறிக்கையில் பனைமரங்கள் குறித்து குறிப்பிடாதது, மிகுந்த வேதனையைத் தருகிறது. தமிழ் நாட்டில் 5 கோடி பனைமரங்கள் இருந்த இடத்தில் தற்போது 2.5 கோடி பனை மரங்கள்தான் உள்ளன. பல லட்சம் விவசாயிகளுக்கு லாபம் கொடுத்து வரும் தொழில் இது. எம்.ஜி.ஆர் ஆட்சி யில் கள் இறக்குவது தடை செய்யப்பட் டது. அதன்பிறகு வந்த கருணாநிதியும் அந்நிய மதுபானத்துக்கு ஆதரவு கொடுத்தார்.

மக்களின் இயற்கை வளம் சார்ந்த, மண்ணோடு பின்னிப் பிணைந்த ஒன்றாக பனை மரம் உள்ளது. கள் இறக்குவது தொடர்பாக எந்த வாக்குறுதிகளையும் தி.மு.க தரவில்லை. தேர்தல் அறிக்கை குழுவில் இருந்தவர்களும், இதற்கு அழுத் தம் கொடுத்தார்களா எனவும் தெரிய வில்லை. டாஸ்மாக் கடைகளால் ஆண் கள் உழைக்கும் திறனை இழந்துவிட்ட னர். தொடர்ந்து 5 ஆண்டுகள் மதுவை அருந்துகிறவர்கள், உடல்நலிவுற்று இறந்துவிடுகின்றனர். ஒரு கிராமத்தில் 62 விதவைகள் இருக்கும் அவலமும் ஏற்பட் டுள்ளது. இதையெல்லாம் தி.மு.க தலைமை கணக்கில் எடுத்துக் கொள்ள வும் இல்லை மது தொடர்பான எந்த விஷயத்தையும் தி.மு.க முன்வைக்க வில்லை” என்கிறார் வேதனைக் குரலில்.

**போட்டியால் ஏற்பட்ட பிழையா?**

தி.மு.க தேர்தல் அறிக்கை தொடர் பாக எழும் குற்றச்சாட்டுகள் குறித்து, தி.மு.க சட்டத்துறை இணைச் செயலா ளர் வழக்கறிஞர் வீ.கண்ணதாசனிடம் பேசியபோது, “தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள சொற் பிழைகளையோ எழுத்துப் பிழைகளையோ பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. மத்திய அரசு சி.ஏ.ஏவை கொண்டு வந்த போது தி.மு.க கடுமையாக எதிர்த்தது. மாநிலங்களவையில் எதிர்த்து வாக்களித் தோம். அதனை ஆதரித்த அ.தி.மு.க, தற்போது வேடம் போட்டுக் கொண்டி ருக்கிறது. சி.ஏ.ஏ எதிர்ப்பில் தி.மு.க உறுதியாக இருக்கிறது. மாற்றுத்திறனா ளிகள் விவகாரத்தில் அவர்களின் உரிமை களை மீட்டெடுப்பது, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதில் தி.மு.க முன்னணியில் இருக்கிறது. தி.மு.கவைப் பற்றி சொல்வதற்கு எதுவுமே இல்லை என்பதால் இதுபோன்ற குற்றச்சாட்டு களை சுமத்துகிறார்கள்” என்கிறார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், “சி.ஏ.ஏ விவகாரத்தில் தி.மு.கவின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி இஸ்லாமியர்களுக்கு நன்றாகவே தெரி யும். முத்தலாக் சட்டத்தை பலரும் ஆதரித்தபோது தி.மு.க கடுமையாக எதிர்த்தது. தி.மு.க தேர்தல் அறிக்கையில் அதனைச் சொல்லவில்லை என்பதால் அதனைக் குற்றமாகப் பார்ப்பது ஏற்பு டையதல்ல. தேர்தல் மே மாதம் வருவ தாகத்தான் இருந்தது. திடீரென தேர்தல் தேதியை அறிவித்ததால் வேகமாகச் செயல்பட வேண்டிய சூழல் ஏற்பட்டது. அரசியல் கட்சிகளிடையே தேர்தல் வாக்குறுதிகளை யார் முந்தித் தருவது என்பதில் போட்டி இருந்தது. எனவே, தேர்தல் அறிக்கையில் சொல்லாதவற்றை யும் நிறைவேற்றித் தருவது தி.மு.கதான் என்பது மக்களுக்குத் தெரியும்” என்கி றார்.

தி.மு.க தயாரித்துள்ள தேர்தல் அறிக்கை, “கதாநாயகனா.. வில்லனா?” என்பது தேர்தல் முடிவில் தெரிந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கம் வளப்படுத்திய நீர்வை பொன்னையன்

## நேற்று அவரது முதலாவது நினைவு தினம்



**சி.வன்னியகுலம்**

ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின் மும்மூர்த்திகள் என கே.டானியல், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன் ஆகியோர் பாராட்டப்படுகிறனர். இவர்கள் மூவருமே இலக்கியப் போராளிகளாக மட்டுமன்றி சமூக விடுதலைப் போராளிகளாகவும் விளங்கியவர்கள். மூவருமே கம்யூனிச சித்தாந்தங்களை வாழ்வின் இலட்சியங்களாக வரித்துக் கொண்டு அதன்வழி இலக்கியம் படைத்தவர்கள். டானியல் யாழ்ப்பாண மண்ணில் களமாடியவர். டொமினிக் ஜீவா மக்களுடன் இணைந்து நின்று இலக்கியப் போர் நிகழ்த்தியவர். நீர்வை பொன்னையன் கொம்யூனிச கோட்பாடுகளையே வாழ்க்கைத் தத்துவமாக்கி சமூகவிடுதலைப் போராட்டம் நிகழ்த்தியவர். இவர்கள் மூவரினதும் இழப்பு ஈழத்து முற்போக்கு இலக்கிய உலகில் ஈடுசெய்யமுடியாததாகும்.

கடந்த வருடம் (2020) மார்ச் மாதம் நீர்வை என்னை அழைத்து தான் கொடிய நோய் வாய்ப்பட்டிருப்பதை எடுத்துக்கூறியதுடன் தன்னுடைய சிறுகதைத் தொகுதி ஒன்று வெளிவர இருப்பதாகவும் கூறினார். அத்துடன் "நீயே எனது புத்தகத்துக்கு அணிந்துரை எழுத வேண்டும்" எனவும் கூறி தட்டச்சு செய்யப்பட்ட சிறுகதைகளையும் என்னிடம் கையளித்தார். 'பாசப் பிரவாகம்' என மகுடமிட்ட அவரது சிறுகதைத் தொகுதிக்கு ஒரு வாரகாலத்துள் அணிந்துரை எழுதி அவரிடம் கையளித்தேன். நூல் அச்சாகு முன்னரே அவர் காலமாகியமை பெரும் சோகமாகும். அணிந்துரை எழுதிய கையால் அவருக்கு அஞ்சலி உரை எழுதுவது மிகப்பெரிய துன்பமாகும்.

நீர்வை பள்ளிப்பருவம் முதல் தமது தொண்ணூறாவது வயதுவரை இடையறாது எழுதிக்கொண்டிருந்தார். அரசியல், சமூகம் வெகுஜனப் போராட்டங்கள் பற்றி பரந்த நோக்கும் ஆழமான சிந்தனை வெளிப்பாடும் கொண்டவர். உழைக்கும் விவசாய தொழிலாளர் வர்க்கத்தின் விடிவிற்காகத் தமது பேனாவை ஆயுதமாகத் தரித்துக்கொண்டவர் கம்யூனிச சித்தாந்தத்தின் தடத்திலேயே தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர். வர்க்க முரண்பாடுகளை சமரசவழிகளாலன்றி வெகுஜனப் போராட்டங்கள் மூலமே தீர்க்க முடியும் என்பதில் நம்பிக்கையுடன் செயற்பட்டவர். மக்களைச் சுரண்டிக் கொளுக்கும் முதலாழித்துவத்தின் மீது ஆராத பகை உணர்வுகொண்டவர். சர்வதேச ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தியவர். ஏகாதிபத்தியங்களின் கபடத்தனங்களைத் தமது எழுத்துக்கள் மூலம் தோலுரித்துக் காட்டியவர். மக்களின் உரிமைப் போராட்டங்களையும் எழுச்சிகளையும் பயங்கரவாதமாக முத்திரை குத்தி அடக்கி ஒடுக்கும் கபடத்தனங்களைச் சாடி நிற்பவர்.

உழைக்கும் மக்களின் பிரதான எதிரிகள், நிலப்பிரபுத்துவம், முதலாழித்துவம், ஏகாதிபத்தியம் ஆகிய மூன்று பிசாசுகள்தான் என மக்கள் விரோத சக்திகளை இனங்காட்டினார். ஏகாதிபத்திய பயங்கரவாதத்திற்கு எதிராக உழைக்கும் வர்க்கத்தையும் அமைப்புக்களையும் தேசங்களையும் ஓரணியாகத் திரட்ட வேண்டும் என உறுதி கொண்டார்.

இத்தகைய புரட்சிகரமான சிந்தனை கொண்ட நீர்வையின் வாழ்க்கைத் தடத்தில் ஒரு பெரும்பாய்ச்சலை உருவாக்கியது அவரது கல்விப் பின்னணியாகும். நீர்வை மேற்கு வங்கத்தின் தலை சிறந்த கல்லூரியாகிய சறம்பூர் கல்லூரியில் கல்விகற்று பட்டம் பெற்றவர். மேற்கு வங்கம் புரட்சியின் தொட்டில் மட்டுமன்று. அது புரட்சிகரமான சிந்தனையும் எழுத்தாற்றலும் கொண்ட நீர்வையை வளர்த்தெடுத்த கட்டினுமாகும்.

அன்னிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இந்திய சுதந்திரப் போராட்டத்தில் வங்கம் புரட்சிகரமான பாதையைத் தேர்ந்தெடுத்தது. சுபாஸ்சந்திரபோஸ் தலைமையில் இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கி பிரித்தானிய ஏகாதிபத்தியத்தையே கதிகலங்க வைத்தது. சுதந்திர இந்தியாவிலே முதன் முதலாக கம்யூனிச அரசு ஒன்றை உருவாக்கி அதனை முப்பது வருடங்களாக கண்ணிமைபோலக் காத்த பெருமையும் வங்கத்துக்கே உரியதாகும்.

"நீர்வையின் ஒட்டுமொத்த ஆளுமை உருவாக்கத்திலும் வங்கம் பலமானதோர் அத்திவாரமாக அமைந்தது. பிற்பாடு தனது சொந்த மண்ணின் அவலங்களை அடையாளம் காண்பதிலும் அவற்றின் மீது போர் தொடுப்பதிலும் அவர் தனது வாழ்நாள் முழுவதும் அயராது உழைப்பதற்கு அதுவே பயிற்சிக் களமாகவும் அமைந்தது" என்பர் வசந்தி தயாபரன்.

நீர்வை தீவிரமாக முற்போக்கு இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டமைக்கு அவரது காலப்பகுதியில் தோன்றி வீறுடன் செயற்பட்ட முற்போக்கு இயக்கங்களும் எழுத்தாளர் சங்கங்களும் காரணமாகின. இரண்டாவது உலகமகாயுத்த காலத்தில் இந்தியாவிலே பிரபல எழுத்தாளர் பிரேம்சந்த் தலைமையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உதயமானது. இதனைத் தொடர்ந்து முற்போக்கு எழுத்தாளர் முல்க்ராஜ் ஆனந்த் அவர்களின் இலங்கைக்கான வருகையுடன் தேசிய மட்டத்திலான இலங்கை எழுத்தாளர் சங்கம் அமைக்கப்பட்டது. (பிரபல சிங்கள நாவலாசிரியர் மார்டின் விக்கிரமசிங்க சங்கத்தின் தலைவராகவும் சுவாமி விபுலானந்தர் உபதலைவராகவும் கே. கணேஸ், டாக்டர் சரச்சந்திர இணைச் செயலாளர்களாகவும் பொருளாளராக பொன் கந்தையாவும் செயற்பட்டனர் 1954 ஜீன் 20 ஆம் திகதி இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உதயமானது. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நலிவுற்ற நிலையிலே 1980 ஆம் ஆண்டளவில் இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் உருவானது. இத்தகைய இலக்கிய அமைப்புக்களுடனும் முற்போக்கு எழுத்தாளர்களுடனும் நீர்வை மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்ததுடன் தீவிரமாக எழுத்துத்துறையில் ஈடுபட்டார்.

இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றத்தினூடாக சுமார் இருபத்துநாலு நூல்களை அவர் பதிப்பித்துள்ளார். இவற்றுள் நீர்வையின் சிறுகதைத் தொகுப்புகள் பதினான்கும் தொகுப்பு நூல்கள் ஆறும் சமூகவியல் நூல்கள் நான்கும் உள்ளடங்கும். நீர்வை பொன்னையனின் இலக்கியப் பணியைப் பாராட்டும் வகையிலே இலங்கை அரசு அவருக்கு அரச "சாஹித்ய ரத்னா" விருது வழங்கி கௌரவித்தமை குறிப்பிடற்குரியதாகும்.

•

# இந்து சமய தமிழர் வரலாறு தொகுக்கப்பட வேண்டும்

**த.மனோகரன்**

ஓர் இனத்தின் பண்டைய இருப்பையும், பெருமையையும் உறுதிபடுத்தும் சான்றாக அமைவது வரலாறாகும். ஒவ் வொரு நாட்டினரும், இனத்தினரும், மொழியினரும், சமயத்தினரும் தமது பண்டைய பெருமையைக் கோடிட்டு காட்டுவதற்கும், தாம் வாழும் நாட்டில் அல்லது பிரதேசத்தில் தமது இருப்பையும், பாரம்பரியத்தையும் நிலைநாட்டுவதற்கும் வரலாற்றை ஒரு சாதனமாகப் பயன்படுத்தி வருவதில் காட்டும் ஆர்வத் தின் மூலம் வரலாற்றின் முக்கியத்துவம் வெளிப்படுத்தப்படுகின்றது.

நமது இலங்கையைப் பொறுத்தவரை தமிழரின், இந்துக்களின் பண்டைய வரலாறு கி.மு 500 ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஒழுங்கு முறையில் தொடர்ச்சியாகத் தொகுக்கப்படப் பல சான்றுகளிருந்த போதும் அப்பணியை உரிய முறையில் இதுவரை எவராவது ஆற்றாமலிருப்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் விஜயன் இலங்கையில் கரையொதுங்கிய காலத்தில் இலங்கையின் நான்கு திசைகளிலும் ஐந்து சிவாலயங்களிருந்ததாகவும், அவற்றை விஜயனுடன் வந்த உபதிஸ்ஸன் என்ற பிராமணன் சென்று வழிபட்டதாகவும் மகாவம்சம் போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளது. நகுலேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், தொண்டீஸ்வரம், முன்னேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்பனவே அவ்வைந்து சிவாலயங்களுமாகும்.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட புராண, இதிகாசங்களிலும் இலங்கையில் சிவ வழிபாடு இருந்தமைக்கான செய்திகள் கூறப்பட்டுள்ளன. இராமாயணம் அவற்றிலொன்று. ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கணிக்கப்படும் இராமாயணத்துடன் தொடர்புடைய இலங்கையிலுள்ள சிவ வழிபாட்டுத் தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம், முன்னேஸ்வரம் ஆகிய ஆலயங்களும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு கொண்ட திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி கோயில், நயினை நாகபூசனியம்மன் கோயில், முருகப் பெருமானது கதிர்காமக் கந்தன் கோயில் எனப்பல சிறப்பும், பழமையும் மிக்க இந்துத் திருத்தலங்கள் உள்ளன.

அத்துடன், சிதைவடைந்த நிலையில் பல சிவாலயங்கள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனையிலும், கொழும்பு மாவட்டத்தின் இரத்மலானையிலும், காலியிலும் காணப்படும் சிவாலயங்கள் இதற்கு எடுத்துக்காட்டாயுள்ளன. பிலியந்தலையிலும் ஒரு சிவாலயம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அதே போன்று சீதாவாக்கையிலும் ஒரு சிவாலயம் உள்ளது. பொலன்னறுவைச் சிவன் கோயில்களும் கவனத்திற்குரியவை.

நாடு முழுவதும் தமிழ் மக்கள் இன்று வாழாத பகுதிகளிலும் பல முருகன் ஆலயங்கள், திருமால் கோயில்கள், அம்மன் கோயில்கள் உள்ளன. பலாங்கொடை அளுத்நுவரையிலுள்ள பழம் பெரும் முருகனாலயம் இதற்கொரு எடுத்துக்காட்டாகும்.

இலங்கையில் இந்து சமயத்தின் தொன்மைக்கும், இந்துக்கள், தமிழரது பண்டைய இருப்புக்கும் கட்டியம் கூறி நிற்கும் வழிபாட்டுத் தலங்கள் விஜயனின் வருகை முதல் இன்று வரை அதாவது, இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேலான தொடர்ச்சியான வரலாற்றுத் தொகுப்புக்கு ஆதாரமாயுள்ளன.

மேலைநாட்டு ஆய்வாளர்கள் சிந்து வெளி நாகரீக காலத்தில் சிவ வழிபாடு நிலவியதென்பதை உறுதிபடுத்தியுள்ளனர். அப்பகுதிக்குச் சென்று ஆய்வு செய்யாத நமது நாட்டு வரலாற்றுத் துறைப் பேராசிரியரொருவர் மேலை நாட்டு ஆய்வாளர்களின் கூற்றை மறுத்துத் தனது மேதாவிலாசத்தைக் காட்டுவதில் ஈடுபட்டதைக் காண முடிகின்றது. நமது நாட்டின் தமிழ் புத்தி ஜீவிகள் எனப்ஷபடும் பேராசிரியர்களோ, கலாநிதிகளோ, விரிவுரையாளர்களோ இலங்கையின் தமிழ் வரலாற்றையோ, இந்து சமயத்தின் தொன்மை வரலாற்றையோ படிமுறையில் தொகுத்து வழங்குவதற்காக எதுவும் செய்வதுமில்லை, செய்வதாயுமில்லை.

ஏற்கனவே முன்னோரால் எழுதப்பட்ட சங்ககால, சங்கம் மருவியகால, பல்லவர்கால, சோழர்கால வரலாறுகளைப் புரட்டிப் புரட்டி எழுதுவதன் மூலம் புத்திஜீவிகள் என்ற வட்டத்துக்குள் தம்மை புகுத்திக் கொண்டுள்ள இலங்கையின் தமிழ், சமய, வரலாற்றுத்துறை சார்ந்தோர் அதிலிருந்து வெளி வந்து இலங்கையில் தமிழ் மொழியின் தொன்மை, வளமை, பெருமைகளையும் அதேபோன்று இந்து சமயத்தின் மேன்மையையும் வெளிக் கொண்டு வருவதே காலத்தின் தேவையாகும்.

இலங்கையில் தமிழர் ஆட்சி செய்த வரலாற்றை ஆணித்தரமாகத் தொகுத்து உறுதிப்படுத்தக்கூடிய செயற்றிறனற்ற தமிழ் வரலாற்று வல்லுநர்களால் சமுதாயம் அடையப் போவது எதுவுமில்லை. இன்று இலங்கையில் இந்துக்களதும், தமிழர்களதும் வரலாறு தொகுக்கப்பட்டு உலகிற்கு கோடிட்டுக் காட்ட வேண்டிய காலத்தின் தேவையுள்ளது.

துறைசார் அறிஞர்களென்று கூறப்படுபவர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும். அறிஞர்கட்கழகு ஆய்வு செய்தல் என்பதற்கிணங்க, ஆய்வு செய்பவர்களே அறிஞர்கள், புத்திஜீவிகள், மற்றையோர் வருவாய்க்காகப் பட்டம் பெற்று பதவி தாங்குபவர்களாகவே கணிக்கப்படுவர். சமுதாய நோக்கில் வருவாயை மட்டும் நோக்காது ஆக்கபூர்வமாகச் செயற்பட்டு, சமூக நலனுக்காகப் பாடுபட துறைசார்ந்தோர் முன்வர வேண்டும். அதுவே சமூக எதிர்பார்ப்பும்.

•

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்


**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**27**

## 2016 (4)

* கீழே தரப்பட்டுள்ள உருக்களில் வளைகோடுகள் மாத்திரம் உள்ள உருவைத் தெரிவுசெய்க.


4.





## 2017 (3),(4)

* 03,04 ஆகிய வினாக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்தும் வேறுபடுகின்றது. வேறுபடும் உருவைத் தெரிவு செய்க.

3.




4.




## 2019 (3),(4)

* 03,04 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து விடை தருக.


3.




A,B ஆகிய இரு உருக்களுக்குமிடையே எத்தனை வேறுபாடுகள் உள்ளன?

(1) 1 (2) 2 (3) 3

4.





C,D ஆகிய இரு உருக்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகளின் எண்ணிக்கை.

(1) நான்கிலும் குறைவாகும் (2) நான்காகும்

(3) நான்கிலும் கூடவாகும்

## 2020 (2)

* உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்காக உரு B இல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?




(1) 2 (2) 3 (3) 5

**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786





# யாழ். மாநகரின் மத்திய பகுதியில் தொற்று நீக்கி விசுறும் நடவடிக்கை

## இராணுவம், பொலிஸ் களமிறக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

**யாழ்ப்பாணம் மாநகரின் மத்திய பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு தொற்று நீக்கி விசுறும் நடவடிக்கை நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.**

யாழ். மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்த நிலையில் நேற்று முன்தினம் மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணியின் அவசர கூட்டம் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தின் போது பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கில் யாழ். நகர்ப் பகுதியில் அதிகளவான பொலிஸார், இராணுவத்தினர்,



சுகாதாரத் துறையினர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நேற்றுக் களமிறக்கப்பட்டனர். (எ)

# 5 வருடங்கள் சேவை அனுபவம் இ.போ.சவில் நிரந்தர நியமனம்!



கொழும்பு, மார்ச் 27

இலங்கை போக்குவரத்து சபையில் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட தொழிற்துறை அனுபவமுடைய சேவையாளர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சாரதி ஆலோசனை பதவிக்கான ஆட்சேர்ப்பு பரீட்சையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற போக்குவரத்துத் துறை நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சின் ஆலோசனைக் செயற்குழுக் கூட்டத்திலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடுபூராகவும் உள்ள உப சாலைகளை பேருந்து தரிப்பிடமாக மாத்திரம் பயன்படுத்தவும் அது தொடர்பான நிர்வாக நடவடிக்கைகள் பிரதான சாலைகள் மூலம் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இதன் ஊடாக நாடு பூராகவும் முறையானதும் சிறந்த சேவையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நகர போக்குவரத்தைக் கையாள்வது தொடர்பான முடிவுகளை எடுக்க மாகாண போக்குவரத்து குழுக் கூட்டங்களில் போக்குவரத்து அமைச்சின் பிரிதிநிதியை கலந்துகொள்ளச் செய்வதன் முக்கியத்துவத்தையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். நகர போக்குவரத்தைக் கையாள்வது குறித்து முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் போது போக்குவரத்து அமைச்சை அடிப்படையாகக் கொண்டு முடிவுகளை எடுக்கும் போது சில மோசடிகளைத் தடுக்க முடியும்.

அரச போக்குவரத்து சேவையில் சாரதி மற்றும் நடத்துநரின் வெற்றிடத்துக்காக குறைந்த வருமானம் பெறுபவர்களைத் தெரிவு செய்து தகுதியானவர்களை விரைவில் இணைத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய வாகனங்களில் காணப்படும் அதி நவீன தொழில்நுட்பம் குறித்து சாரதிகளை தெளிவுப்படுத்தும் வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனை செயற்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. இதுகுறித்து சாரதிகளுக்கு போதிய தெளிவின்மை காரணமாக நவீன வாகனங்களின் தன்மை விரைவில் பாதிப்படைவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இணையவழி ஊடாக புகையிரத பயண அனுமதிச் சீட்டுக்களைப் பதிவு செய்யும் போது ஏற்படும் அசௌகரியம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன் அது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறும் இராஜாங்க அமைச்சர் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

மேலும் நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களைக் குறைத்துக்கொள்வதற்கு தேவையான பரிந்துரைகளை முன்வைக்குமாறும் பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று உருவாக்குவதன் தேவை குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதான கோரிக்கைகளை நீக்கிவிட்டு இலங்கையைக் காப்பாற்றியது ஐ.நா.

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், மார்ச் 27

**இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை மற்றும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் போன்ற ஈழத்தமிழர் முன்வைத்த பிரதான கோரிக்கைகளை நீக்கிவிட்டு, இலங்கையைக் காப்பாற்றியுள்ளது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை என வடக்கு கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது.**


இதுதொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்: 'உண்மையில் பொறுப்புக்கூறலை இலங்கை அரசிடமே கொடுக்கின்ற ஒரு வலுவற்ற தீர்மானமே இது.

13 ஆம் திருத்தச் சட்டமே தமிழருக்கு நிரந்தர அரசியல் தீர்வுக்கான ஒரே வழி என்று இந்தியா பல ஆண்டுகளாக கூறிவந்தது. பிரித்தானியா தலைமையில் உறுப்பு நாடுகளால் தயாரிக்கப்பட்ட தீர்மானத்துக்குள் இந்தியா புகுத்திவிட்டு பங்கேற்காமல் வெளிநடப்பு செய்திருக்கிறது.

13 ஆம் திருத்தச்சட்டம் என்பது ஈழத்தமிழர் அரசியல் விடுதலைக்குரிய ஏற்பாடுகளுக்கான ஆரம்பப் புள்ளியாகக்கூட அமையாதென்பது தமிழர் தரப்பால் சுட்டிக்காட்டி வந்த போதும் தமது அரசியல் முகவர்களை பயன்படுத்தி கடந்த பல ஆண்டுகளாக இந்தியா வாய்ப்பேச்சாக கூறிவருவது இங்கே குறிப்பிடத்தக்கது.

இன்றைய கால கட்டத்தில் பன்னாட்டு அரங்கில் இலங்கைக்கு ஏற்பட்ட தோல்வியாக இது இருந்தாலும், முன்னைய தீர்மானங்களை விட வலுவற்ற வெறுமனே நீர்த்துப்போன ஒரு தீர்மானமாக இது வெளிப்படையாக சுட்டிக்காட்டி நிக்கின்றது, இந்தத் தீர்மானம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை மீண்டும் நசுக்கும் செயலாகும் 'என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# மெய்நிகர் வழியாக நீர்வையின் நினைவுப் பகிர்வு நிகழ்வு




நீர்வை பொன்னையன் மறைந்து நேற்று 26ஆம் திகதி ஓராண்டு பூர்த்தியாகியுள்ளது. அதனை முன்னிட்டு இலக்கிய ஆர்வலலர்கள் மற்றும் மறைந்த எழுத்தாளர் நீர்வையின் குடும்பத்தினர் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'நீர்வையின் ஓராண்டு நினைவுப்பகிர்வு' நாளை மறுதினம் 29ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு மெய்நிகர் வழியாக மூத்த எழுத்தாளர் என்.ரவீந்திரன் - தலைமையில் இடம் பெறவுள்ளது.

நினைவுப்பகிர்வு நிகழ்வில், எழுத்தாளர்களான என்.ரவீந்திரன 'சமூக மாற்றச் செயற்தளத்தின் எழுத்தியக்கம்', .லெ.முருகபூபதி - நீர்வையின் சித்தாந்த நேர்மை, விக்கினேஸ்வர நாதன் சாரங்கன் நீர்வையின் 'பாதை' யில் நாம் கண்டடைந்தவை, வசந்தி தயாபரன் - 'மானுடப் பண்பாளர்'.வை. கருணை நாதன் - 'கலை இலக்கிய செயபாட்டு இயக்கத்தில் நீர்வை' , ஆகிய தலைப்புக்களில் உரையாற்றவுள்ளனர்.

எழுத்தாளர்களான தெளிவத்தை ஜோஸப், திக்குவல்லை கமால், சரத் ஆனந்த, லன்டன் உதயனன், தாய்வீடு திலிப், என்.சரவணன், ஆர். சிவகுருநாதன், டாக்டர் முருகானந்தன், ஐ.சாந்தன் பவித்திரா கைலாசபதி, காசிம் ஆகியோர் உட்பட மேலும் பலர் கருத்துக்களை பகிர்ந்துக்கொள்ளவுள்ளனர்.

ஊடகவியலாளர் ஜீவா சதாசிவம் தொகுத்து வழங்கவுள்ள இந்நிகழ்வில் தா.சுரேந்திரனின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவடையும்.

உள்நாடு, வெளிநாட்டில் வாழும் எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் நீர்வையின் உறவுகள் , நண்பர்கள் Meeting ID: 896 146 8942 Passcode: 783125 ஊடாக கலந்து கொள்ளலாம்.

# பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரிக்குமாறு வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 27

பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கைகளை அதிகரிக்குமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் நவீன் டி சொய்சா வலியுறுத்தியுள்ளார்.

கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையிலேயே அதிக ஆபத்துள்ள பகுதிகளில் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கைகளை அதிகரிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

# அடிப்படைவாத கருத்து பரப்பிய இருவர் கைது

கொழும்பு, மார்ச் 27

அடிப்படைவாதக் கருத்துக்களைப் பரப்பினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

ஒருவர் மட்டக்களப்பிலும், மற்றையவர் மாத்தளையிலும் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சஹ்ரானுடன் நெருங்கிய தொடர்பு பேணிய சந்தேகநபர் ஒருவரே மட்டக்களப்பில் வைத்து கைது செய்யப்பட்டார்.

மேலும் மாத்தளையில் கைது செய்யப்பட்டவர் அண்மையில் வெளிநாடு ஒன்றிலிருந்து நாட்டுக்கு வருகை தந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அஸ்ட்ராசெனேகா தடுப்பூசி இரண்டாம் டோஸ் ஏப்ரலில்

கொழும்பு, மார்ச் 27

ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராசெனேகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் வழங்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

கொரோனா தடுப்பூசி ஏற்றுமதியை இந்தியா இடைநிறுத்தியுள்ள நிலையில், இலங்கையின் கொள்வனவு பாதிக்கப்படாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# சுதந்திர கட்சிக்கு அரசில் பாரபட்சம்

## தயாசிறி மீண்டும் குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 27

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு அரசாங்கத்தில் பாரபட்சம் காட்டப்படுகின்றது என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜெயசேகர குற்றம்சாட்டியுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின் நிறைவில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே தயாசிறி இவ்வாறு குற்றம்சாட்டினார்.

தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கம் கூட்டணி அரசாங்கம் எனக் குறிப்பிட்ட அவர், தொடர்ந்தும் கூட்டணியாக இணைந்து செயல்பட எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

எனினும், கட்சிக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் தொடர்ந்தும் செயல்பட முடியாது.

அத்துடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (எ)

# வடக்கில் தீவுகளுக்கான போக்குவரத்து சேவையை மேம்படுத்த நடவடிக்கை

கொழும்பு,மார்ச் 27

வடமாகாணத்திலுள்ள தீவுகளுக்கான போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என பயணிகள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.தீவுப்பகுதிகளில் தற்போது மிகவும் பழைய பேருந்துகளே சேவையில் ஈடுபடுவதாகவும், இதன் காரணமாகவே புதிய பேருந்துகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

குறித்த பேருந்துகள் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் அவை வடமாகாணத்திலுள்ள தீவுப் பகுதிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார். (எ)

# அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு

கொழும்பு,மார்ச் 27

அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

'Dampal Daruwo' என்ற தேசிய அமைப்பால் இவ்வாறு முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

புகையிலை, ஆல்கஹால் ஆணைய சட்டத்தின் விதிமுறைகளை மீறும் வகையில் செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இவ்வாறு முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

அண்மையில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையில் கறுவாப்பட்டை சிகரெட் அறிமுகம் செய்து வைக்கப்பட்டிருந்தது.

இதன்போது, அமைச்சர் விமல் வீரவன்ஸ அறிமுகம் செய்ய குறித்த சிகரெட்டை வாயில் வைத்திருந்தமை பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது.




இதுகுறித்து பல்வேறு தரப்பினரும் தொடர்ந்தும் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# ஊழல் மோசடியில் ஈடுபட்ட அனைவருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் தண்டனை!

## சம்பிக்க எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 27

ஊழல் மோசடியில் ஈடுபட்ட அனைவருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தில் தண்டனை வழங்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



குறிப்பாக சீனி மற்றும் எண்ணெய் இறக்குமதியில் இடம்பெற்றுள்ள மோசடியுடன் தொடர்புடைய அனைவருக்கும் தண்டனை கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் ஏற்றுமதி களைநாசினியால் இலங்கை, இந்தியாவில் மரணங்கள்!

## அம்பலப்படுத்தியது “சனல் 4” ஊடகம்

லண்டன், மார்ச் 27

பிரிட்டனில் தயாரிக்கப்பட்டு ஏற்றுமதியாகும் கொடிய விவசாய நச்சுக் களைகொல்லி மருந்து காரணமாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. ஐரோப்பாவில் தடைசெய்யப்பட்ட இந்த களைகொல்லி மருந்தை தொடர்ந்தும் அதன் பாதிப்புக்களை கணக்கில் எடுக்காமல் விற்பனை செய்து ஆதாயம் தேடும் நோக்கில் செயல்படுவதாக அதன் தயாரிப்பு நிறுவனம் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. பிரிட்டனின் “சனல் 4” தொலைக்காட்சியே ஆதாரங்களுடன் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது.

‘கிராமக்சோன்’ எனப்படுகின்ற மலிவான நச்சுக் களைநாசினி கடந்த பல தசாப்தங்களாக உலகெங்கும் விவசாயிகளால் விளைநிலங்களில் களைகளை அழித்து உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் பயன்படுத்தப் பட்டு வருகிறது. ‘சின்ஜென்ரா’ குழுமம் என்னும் சர்வதேச விவசாய விஞ்ஞான, தொழில்நுட்பப் பொருள் உற்பத்தி நிறுவனமே அதனைத் தயாரித்து சந்தைப்படுத்துகின்றது. இதன் தொழிற்சாலைகள் சுவிஸ் நாட்டைத் தலைமையகமாகக் கொண்டு உலகெங்கும் இயங்கிவருகின்றன.




‘சின்ஜென்ரா’ நிறுவனத்தின் பிரிட்டிஷ் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்ற ‘கிராமக்சோன்’ பீடை நாசினியே இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்குத் தொடர்ந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது என்பதற்கான ஆதாரங்களை ‘சனல்4’ தொலைக்காட்சி ஆவணப்படமாக வெளியிட்டிருக்கிறது.

‘சின்ஜென்ரா’ குழும நிறுவனம் அதன் கொடிய நச்சு மருந்தின் பாதுகாப்பு உத்தரவாதத்தை நிரூபிப்பதற்காகப் போலியான தரவுகளைக் காட்டி உள்ளது என்றும் அதற்கான இரகசிய ஆவணங்கள் சிக்கியுள்ளன எனவும் “சனல் 4” தெரிவிக்கிறது. ஆனால், அதனை ‘சின்ஜென்ரா’ நிறுவனம் மறுத்துள்ளது.

இந்தியா உட்பட பல நாடுகளில் ஆயிரக் கணக்கான இளவயதினரது தற்கொலை முயற்சிகளுக்குப் பெரிதும் இந்த நச்சுத் திராவகமே காரணம் என்று கூறப்படுகிறது. (ஐ)



# இந்திய பிரதமர் மோடி பங்களாதேஷ் பயணம்

டாக்கா, மார்ச் 27

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரு நாள் பயணமாக நேற்று பங்களாதேஷ் சென்றார். அவரை டாக்கா விமான நிலையத்தில் அந்நாட்டின் பிரதமர் ஷேக் ஹசீனா வரவேற்றார்.

கொரோனா தொற்று பரவ ஆரம்பித்த 15 மாதங்களுக்கு பின்னர் இந்திய பிரதமரின் முதல் பயணம் இதுவாகும்.

பங்களாதேஷின் தந்தை ஷேக் முஜிபுர் ரஹ்மானின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில் அவர் நேற்று பங்கேற்றார்.

அத்துடன், இந்துக்களின் புராணத்தில் 51ஆவது சக்தி பீடமாகப் போற்றப்படும் ஜெசோரேஸ்வரி காளி கோயிலுக்கு சென்றும் அவர் வழிபடவுள்ளார். இதன் போது இரு நாடுகளிடையேயும் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மியன்மாரில் இராணுவத்தால் 320 பொதுமக்கள் சுட்டு கொலை!

யங்கூன், மார்ச் 27

மியன்மாரில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் நேற்றுவரை 320 பொதுமக்கள் அரச படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அரசியல் கைதிகளின் விடுதலைக்காகப் போராடும் ஏ. ஏ. பி. பி. அமைப்பு தெரிவித்துள்ளது.

இவர்களில் கிட்டத்தட்ட 90 வீதம் பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவ்வாறு சுடப்பட்டவர்களில் 25 வீதம் பேர் தலையில் சுடப்பட்டு இறந்தனர். ஏனையோர், தாக்குதல்களில் இறந்துள்ளனர் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இராணுவத்தின் இந்த கொலைகள் மியன்மார் மக்களிடையேயும் சர்வதேச நாடுகள் மத்தியிலும் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்கா உட்பட பல மேற்குலக நாடுகள் மியன்மார் மீது பொருளாதார தடை உள்ளிட்ட நெருக்கடிகளை கொடுத்து வருகின்றன. பொதுமக்களுக்கு எதிராக இராணுவ சக்தியைப் பயன்படுத்துவதை எதிர்த்து மியன்மாரின் அண்டை ஆசிய நாடுகளும் கண்டனம் வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் மியன்மாரில் இராணுவத்தால் தொடர்ந்தும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தினமும் இழைக்கப்படுகின்றன என்று கூறும் ஏ.ஏ.பி.பி. அமைப்பு, இராணுவ சதிப் புரட்சியைத் தொடர்ந்து 3,000 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் கூறியுள்ளது.

இதேவேளை, போராக்காரர்களின் தாக்குதல்களில் 9 படையினர் கொல்லப்பட்டனர் என்று இராணுவ ஆட்சிப் பீடம் தெரிவித்துள்ளது. (ஐ)

# அவசர பிரிவுகளில் இளைஞர்கள்! எதிர்ப்பு சக்தி அவர்களிடம் இல்லை

## எச்சரிக்கிறார் சுகாதார அமைச்சர்!!

பாரிஸ், மார்ச் 27

இள வயதினர் வைரஸ் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவர்கள் அல்லர். வைரஸின் மாறுபாடான குணவியல்புகள் தற்போது இளைஞர்களையும் தாக்கி வருகின்றது.

பிரான்ஸின் சுகாதார அமைச்சர் ஒலிவியே வேரன் நேற்று முன்தினம் மாலை நடத்திய வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு எச்சரிக்கை செய்தார்.

பாரிஸ் பிராந்தியம் உட்பட நாடெங்கும் ஆஸ்பத்திரிகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் சேர்க்கப்படும் இளவயதினரின் எண்ணிக்கை சிறிதளவு அதிகரித்து வருவதை உறுதிப்படுத்திய அமைச்சர், ‘கொரோனா வைரஸ் அதன் ஆரம்பத்தில் அதிகம் வயோதிபர்களையே பலி எடுத்துவந்தது. தற்போது அதன் மூன்றாவது அலையில் புதிய வைரஸ் திரிபுகள் இளவயதினரையும் குறி வைக்கின்றன’ - என்று தெரிவித்தார்.

வீடுகளிலும் பொது இடங்களிலும் விழிப்புடன் விதிகளைக் கடைப்பிடிக்குமாறு அவர் இளைஞர்களைக் கேட்டுள்ளார். இதேவேளை - தற்போது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற 16 மாவட்டங்களுடன் மேலும் மூன்று மாவட்டங்கள் புதிதாக சேர்க்கப்பட்டுகின்றன என்று சுகாதார அமைச்சர் அறிவித்தார். (ஐ)

# கர்ப்பவதிகள், தாய்மாருக்கு தடுப்பூசியால் பாதுகாப்பே!

வாஷிங்டன், மார்ச் 27

கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மாருக்கு செலுத்தப்படும் கொரோனா தடுப்பூசியால் அவர்களின் குழந்தைகளும் பாதுகாப்பு பெறுகின்றனர் என்று மகப்பேற்று மற்றும் பெண்கள் நோயியல் தொடர்பான அமெரிக்க சஞ்சிகையின் ஆய்வு முடிவில் தெரிய வந்துள்ளது.

பைசர், மொடர்னா தடுப்பூசிகளை செலுத்திப் பரிசோதிக்கப்பட்ட ஆய்விலேயே இந்த முடிவு தெரியவந்துள்ளது.

131 பெண்களுக்கு பைசர் அல்லது மொடர்னா தடுப்பூசியை செலுத்தப்பட்டது. இதில் 84 பெண்கள் கர்ப்பவதிகளாகவும், 31 பேர் பாலூட்டும் தாய்மாராகவும் இருந்தனர். 16 பெண்கள் இந்த இரண்டு வகை சாராதவர்களாகவும் இருந்தனர்.

அவர்களுக்கு செலுத்தப்பட்ட தடுப்பூசியால் அவர்களுக்கு அதிக நோய் எதிர்ப்பு சக்தி கிடைத்தது. இரு தடுப்பூசிகளும் நம்ப முடியாதளவு திறம்பட செயல்பட்டன என்றும் அந்த ஆய்வு முடிவு கூறுகின்றது. (ஐ)

# இந்தியாவுடனான எல்லையில் இராணுவ பதற்றம் தணிந்தது!

## சீனா அறிவிப்பு

பீஜிங், மார்ச் 27

இந்திய - சீன எல்லையான கிழக்கு லடாக்கில் நீடித்த இராணுவப் பதற்றம் தணிந்துள்ளது என்று சீன இராணுவம் அறிவித்துள்ளது. இரு நாடுகளும் கிழக்கு லடாக்கில் அடிக்கடி மோதல்களில் ஈடுபட்டன. இதனால் பெரும் உயிரிழப்புக்களும் ஏற்பட்டன.

எனினும், இரு நாடுகளும் இது குறித்து சமாதானப் பேச்சில் ஈடுபட்டன. பல சுற்றுப் பேச்சுகளின் பின்னர் இரு தரப்பினரும் இராணுவத்தினரை திரும்பப் பெற்றனர். இதைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் தணியத் தொடங்கியது.

எனினும் எல்லைக்கோட்டில் இரு தரப்பு இராணுவத்தினரும் தீவிர பாதுகாப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையிலேயே, சீன இராணுவத்தின் மூத்த தளபதிகளில் ஒருவரான ரென்குவாகியாங், எல்லையில் இரு தரப்பினரும் படைகளை திரும்பப் பெற்றுள்ளன. சமாதான பேச்சுக்களால் எல்லைப் பதற்றம் தணிந்துள்ளது என்று கூறியுள்ளார். எனினும், இந்த விடயத்தில் இந்திய தரப்பு மௌனம் சாதிக்கிறது. இருப்பினும் எல்லைக் கோட்டின் அருகே இருக்கும் இராணுவத்தை சீனா திரும்பப் பெறவில்லை என்று இந்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (ஐ)

# கொரோனாவால் நிதி நெருக்கடி: மதகுருமாருக்கு ஊதிய குறைப்பு

## பாப்பரசர் அறிவிப்பு



வத்திக்கான், மார்ச் 27

கொரோனாவால் நிதி நெருக்கடி காரணமாக கர்தினால்கள், பிற குருமார்களின் சம்பளத்தை குறைப்பதற்கு பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் உத்தரவிட்டுள்ளார்.

கொரோனா பெருந்தொற்றால் உலக நாடுகள் பலவும் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்புக்களை சந்தித்து வருகின்றன. வத்திக்கானில் அருங்காட்சியகங்கள், புனித தலங்கள், சுற்றுலா தலங்கள் மூடப்பட்டன. இதனால் 5 கோடி பவுண்ட்ஸ் - சுமார் 1, 250 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால், கர்தினால்கள் உட்பட ஏனைய குருமாருக்கு சம்பளத்தை குறைக்க பாப்பரசர் பிரான்சிஸ் உத்தரவு பிறப்பித்துள்ளார். இது வரும், ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைக்கு வருகிறது.

கர்தினால்கள் மாதம் 5ஆயிரம் பவுண்ட்ஸ் - சுமார் 12.5 இலட்சம் ரூபா பெறுகின்றனர். இதில் 10 வீதத்தையும் ஏனை மதகுருக்களின் ஊதியத்தில் 3 - 8 சதவீதம் வரையிலும் குறைக்கப்படவுள்ளன. சம்பளம் குறைக்கப்பட்டாலும், பணி நீக்கம் இடம்பெறாது என்று பாப்பரசர் அறிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூன்றாம் நிலை வீரராக 10,000 கடந்தார் கோலி!

புனே, மார்ச் 27

ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 3ஆம் நிலை வீரராக 10,000 ஓட்டங்கள் எடுத்து சாதனை படைத்துள்ளார் இந்திய அணித் தலைவர் விராட் கோலி. அத்துடன் 7ஆவது முறையாக நான்கு அரைச்சதங்களை தொடர்ந்து அடித்துள்ளார்.

இங்கிலாந்து அணி இந்தியாவுக்கு சென்று தற்போது ஒருநாள் தொடரில் விளையாடி வருகின்றது. நேற்று நடந்த இரண்டாவது ஒருநாள் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பை தெரிவு செய்தது.

நேற்றைய ஆட்டத்தில் விராட் கோலி 66 ஓட்டங் களை எடுத்தார். ஆனால், நேற்று அவர் 4 ஓட்டங்களை பெற்றபோது மூன்றாம் நிலை வீரராக களமிறங்கி 10,000 ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற பெருமையை பெற்றார்.

முன்னதாக அவுஸ்திரேலியாவின் றிக்கி பொண்டிங் 12,662 ஓட்டங்களை 42.48 என்ற சராசரியுடன் குவித் துள்ளார். இப்போது கோலி 10,000 ஓட்டங்களை 62.89 என்ற சராசரியில் பெற்றுள்ளார்.

ஒரே நிலையில் தொடர்ந்து விளையாடி மூன்று வீரர் கள் மட்டுமே 10,000 ஒருநாள் ஓட்டங்களை எடுத் துள்ளனர். சச்சின், பொண்டிங், கோலி ஆகியோர் 10,000 ஓட்டங்களை கடந்துள்ளனர். இதில் மிக விரை வாக, 190ஆட்டங்களில் இந்த இலக்கை எட்டியுள்ளார் விராட் கோலி. (ஐ)

# இலங்கை - மேற்கிந்தியா முதல் டெஸ்ட் சமநிலை!

அன்டிகுவா, மார்ச் 27

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதிய முதலாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடி வடைந்தது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சென்றுள்ள இலங்கை அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொட ரில் தற்போது விளையாடுகின்றது. முதலாவது டெஸ்டில் இறுதி நாளான நேற்று முன்தினம் 34 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் இருந்த மேற்கிந் தியத் தீவுகள் தொடர்ந்து துடுப்பெடுத்தடியது.

அணித் தலைவர் பிராத் வெயிட் 23 ஓட்டங்களு டன் நடையை கட்டவைத்தார் எம்புலுதெணிய, பொன்னரு டன் சேர்ந்த கெயில் மேயர்ஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அபாரமாக ஆடி அரைச்சதம் கடந்த மேயர்ஸ் 52 ஓட்டங்களுடன் எம்புலுதெணி யவின் பந்தில் திரிமன்னேயிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அடுத்து வந்த பிளக்வூட்டை விஸ்வ பெர் னாண்டோ 4 ஓட்டங்களுடன் வெளியேற்றினார்.

போட்டியின் ஐந்தாம் நாள் நிறைவில் 100 ஓவர்களை சந்தித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 236 ஓட்டங்களைப் பெற்றது.

இதனால் முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி இலங்கையை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது. முதல் இனிங்ஸில் இலங்கை 169 ஓட்டங்களைப் பெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் 271 ஓட்டங்களைப் பெற்று 102 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸில் ஆடிய இலங்கை அணி 476 ஓட்டங்களைக் குவித்தமை குறிப் பிடத்தக்கது. பொன்னர் போட்டியின் நாய கனாக தெரிவு செய்யப்பட்டார். (ஐ)



# பங்களாதேஷ் அணியை வெற்றிகொண்டது நியூஸி.

வெலிங்டன், மார்ச் 27

கொன்வே, மிற்செல் ஆகியோரின் அபாரமான கன்னிச் சதங்களின் உதவியால் பங்களாதேஷ் அணியை 164 ஓட்டங்களால் வெற்றி கொண்டது நியூஸிலாந்து அணி. இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை முழுமையாக வென்றது அந்த அணி.

நியூஸிலாந்து சென்றுள்ள பங்களாதேஷ் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியாது. ஏற்கனவே இரு போட்டிகளை வெற்றி கொண்ட நியூஸிலாந்து அணி மூன்றாவது போட்டியில் நேற்று களமிறங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. மார்ட்டின் குப்தில், ஹென்றி நிக்கோல்ஸ் இணை களமிறங்கியது. இந்த இணையை 44 ஓட்டங்களுடன் பிரித்தார் தஸ்கின் அஹமட். அடுத்து வந்த கொன்வே பங்களாதேஷின் பந்துகளை அநாயசமாக அடித்தாடினார்.

இந்நிலையில், குப்தில் 26 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். அடுத்து வந்த ரெய்லர் 7, ரொம் லதம் 18 ஓட்டங்கள் என வீழ்ந்தனர். எனினும் பின்னர் வந்த டரில் மிற்செல் அதிரடியாக ஆடினர்.

இருவரின் சிறப்பான ஆட்டத்தால், நியூஸிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென்று உயர்ந்தது. 95 பந்துகளில் 13 பௌண்ட்ரிகளை அடித்த கொன்வே தனது முதல் சதத்தைப் பூர்த்தி செய்தார். தொடர்ந்து ஆடிய அவர் 110 பந்துகளை எதிர்கொண்டு 17 பௌண்ட்ரிகளை அடித்து 126 ஓட்டங்களை எடுத்தார்.

50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்த நியூஸிலாந்து 318 ஓட்டங்களைப் பெற்றது.

டரில் மிற்செல் 92 பந்துகளில் 9 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் தனது கன்னச் சதத்தைப் பூர்த்தி செய்து ஆட்டமிழக்காது இருந்தார்.

பங்களாதேஷின் பந்துவீச்சில் ருபெல் ஹெசைன் 3 விக்கெட்களையும் முஸ்தபிர் ரஹ்மான, தஸ்கின், சௌம்ய சர்கார் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி



நியூஸிலாந்தின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் தடுமாறியது.

மஹ்முல்லா மட்டும் ஆட்டமிழக்காமல் 6 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 76 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்காதிருந்தார். இதுவே பங்களாதேஷ் அணியின் வீரர் ஒருவர் பெற்ற அதிக ஓட்டமாக அமைந்தது. அடுத்து லிரொன் டாஸ் 21, முஸ்பிகர் ரஹ்மான் 21 ஓட்டங்களைப் பெற்றனர். இது அந்த அணியின் இரண்டாவது அதிக பட்ச ஓட்டமாக இருந்தது. ஏனைய வீரர்கள் எவரும் இரட்டைப் படை ஓட்டத்தைப் பெறவில்லை.

இதனால், பங்களாதேஷ் அணி 42.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது.

நியூஸிலாந்தின் பந்துவீச்சில் ஜேம்ஸ் நீசம் 5, மட் ஹென்றி 4 விக்கெட்களை கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக கொன்வே தெரிவானார். (ஐ)

# இலங்கை அணியை தரவரிசையில் முதலிடத்துக்கு கொண்டு வருவேன்

## ரொம் மூடி உறுதி

கொழும்பு, மார்ச் 27

“இலங்கை அணியை சர்வதேச கிரிக்கெட் அணி தரவரிசையில் முதலிடத்திற்கு கொண்டுவருவதே எனது நோக்கம் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், 2007 ஆம் ஆண்டு ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணியை சிறப்பாக வழிநடத்திய தலைமை பயிற்சியாளருமான ரொம் மூடி தெரிவித்துள்ளார்.

இந்த செயல்பாட்டில் அனைத்துதுறைகளின் தரவரி சையிலும் இலங்கை அணியை உயர்த்த முடியும். இதன் போது தனிநபர்கள் அல்லது வீரர்கள் மீது மட்டுமல்ல, உட்கட்டமைப்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் பணிப்பாளராக மூன்று ஆண்டுகால ஒப்பந்தத்தில் நியமிக்கப்பட்ட ரொம் மூடி, நேற்று முன்தினம் கொழும்பு தாஜ் சமுத் திரா ஹொட்டலில் ஊடகங்களை சந்தித்தார். இதன் போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இலங்கை கிரிக்கெட்டைப் பற்றி சிறிது மதிப்பாய்வு செய்ய வேண்டும். தலைமை பயிற்றுவிப் பாளராக சர்வதேச அளவில் நான் பெற்ற பல்வேறு அனுபவங்களைத் தொடர தற்சமயம் எதிர்பார்க்கிறேன். எதிர்காலத்தில் சில குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்ய சிறிது நேரம் எடுக்கும். ஆனால், கிரிக்கெட் நிர்வாகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நான் நன்கு தயாராக இருக்கிறேன்.

இந்த முழு செயல்முறையின் மூலமும் கட்டமைப்பை சரியாகப் பெற முடிந்தால், நாங்கள் இழந்த இடத்தை மீண்டும் பெறுவோம் என்றும் அவர் கூறினார் - என்றார். (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண முறைமையை இரத்து செய்ய முடியாது

## தேர்தல் நிச்சயம் நடத்தப்படும் அமைச்சர் வாசுதேவ உறுதி



கொழும்பு, மார்ச் 27

**அரசமைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை ஒரு சிலரது தனிப்பட்ட நோக்கங்களுக்காக இரத்துச் செய்ய முடியாது. எனவே, மாகாண சபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். மாகாண சபை முறைமை அரச நிர்வாகத்துக்கு முக்கியமானது என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

மாகாண சபை முறைமையை முழுமையாக இரத்துச் செய்து, உள்ளூராட்சி மன்ற முறைமையை பலப்படுத்துமாறு ஆளும் தரப்பின் சில உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவை அவர்களின் தனிப்பட்ட கருத்தாகும். இவ்வாறான தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்காக அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமையை ஒருபோதும் நீக்க முடியாது. அதற்கான அவசியமும் அரசாங்கத்துக்கு கிடையாது.

ஜூலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. தேர்தல் முறைமையில் சட்ட சிக்கல் காணப்படுகின்றது. பழைய முறைமையின் அடிப்படையில் தேர்தலை 3 மாத காலத்துக்குள் நடத்த முடியும். ஆனால், இதற்குப் பாராளுமன்றில் அனைத்து உறுப்பினர்களின் ஆதரவு அவசியம்.

தேர்தல் முறைமையில் காணப்படும் சிக்கல் நிலைக்குத் தீர்வு காண்பதற்கு பாராளுமன்றின் மூலம் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இனப் பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப் பட்டது. நல்லாட்சி அரசாங்கம் தேர்தலை உரிய காலத்தில் நடத்தியிருந்தால் இன்று அது தொடர்பில் மாறுபட்ட விமர்சனங்கள் தோற்றம் பெற்றிருக்காது.

மாகாண சபை முறைமையை வெள்ளை யானை என்று சித்திரிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதன் ஊடாக பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அரச நிர்வாகத்தில் மாகாண சபை முறைமை அவசியமானது. மக்களின் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகளின் நிர்வாகம் ஜனாதிபதியின் பிரதிநிதியால் நிர்வகிக்கப்படுவது ஜனநாயக கொள்கைக்கு முரணானது- என்றார். (எ)

# சதொச வழக்கிலிருந்து ஜோன்ஸ்டன் விடுவிப்பு

கொழும்பு, மார்ச் 27

அரசியல் நடவடிக்கைகளுக்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்தின் காலத்தில் சதொச ஊழியர்களைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பான வழக்கிலிருந்து அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவர் விடுவிக்கப்பட்டனர்.

இந்த உத்தரவை கொழும்பு பிரதம நீதிவான் நேற்றுப் பிறப்பித்தார்.

2010 - 2014 ஆம் ஆண்டு வரை வர்த்தக அமைச்சராகச் செயல்பட்டபோது சதொச நிறுவனத்தின் 153 ஊழியர்களை அவருடைய அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடுத்தியதோடு, அதனால் அரசாங்கத்துக்கு 4 கோடி ரூபா நஷ்டத்தை ஏற்படுத்தியதாகக் குறிப்பிட்டு நல்லாட்சி அரசாங்கத்தின் போது இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சதொசவின் முன்னாள் தலைவர் இராஜ் பிரியந்த பெர்னாண்டோ, மற்றும் மொஹமட் சர்கர் ஆகியோருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று இந்த மூவரும் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். (எ)

# 23 லட்சம் ரூபா திட்டமிட்டு கொள்ளை முகாமையாளர் உட்பட இருவர் கைது

கொழும்பு, மார்ச் 27

திட்டமிட்டு 23 இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்ட சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

நிறுவனமொன்றின் முகாமையாளராகப் பணிபுரியும் குறித்த சந்தேக நபர்களில் ஒருவர் அந்நிறுவனத்துக்கு உரித்தான 23 இலட்சம் ரூபா பணம் மற்றும் 84 ஆயிரம் பெறுமதியான காசோலை என்பவற்றை வேறு நபர்கள் ஊடாக திட்டமிட்டு கொள்ளையிட்டுள்ளதோடு, அது தொடர்பில் அவரே பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.

முகாமையாளரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமை முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் குறித்த நபர் இவ்வாறு திட்டமிட்டு நிறுவன பணத்தை கொள்ளையிட்டுள்ளமை தெரிய வந்தது என பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (எ)

# மரணஅறிவித்தல்

மலர்வு
08 - 09 - 1946



இறப்பு
23 - 03. - 2021

## திருமதி திலகவதி அருட்பிரகாசம்

இலந்தைச்சாலை, காரைநகரைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 02,திருவள்ளுவர் ஒழுங்கை,கந்தர்மடத்தைவசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி அருட்பிரகாசம் 23.03.2021 செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைவனடிசேர்ந்தார் என்ற செய்தியை ஆழ்ந்தகவலையுடன் அறியத் தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர் வேலுப்பிள்ளை (ஐயம்பிள்ளைமாஸ்ரர்) - இராசம்மாதம்பதியரின் அன்புமகளும், அரசடிக் காட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், சுப்பிரமணியம் அருட்பிரகாசத்தின் அன்புமனைவியும், காலஞ்சென்ற தருமலிங்கம், பார்வதி, சொக்கலிங்கம் மற்றும் சிவபாக்கியம், காலஞ்சென்ற அமிர்தலிங்கம்,தேவமங்கைமற்றும் அன்னலட்சுமி, காலஞ்சென்றகருணைலிங்கம் மற்றும் சிவமணி, சபாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மகேஸ்வரிவைகுந்தவாசன் மற்றும் சரஸ்வதி, பாலசிங்கம்,காலஞ்சென்ற இராமச்சந்திரன், செல்வநாயகம், விசுவலிங்கம், நடராஜா, தேவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 24.03.2021 நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம். இந்தஅறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திரு.சு.அருட்பிரகாசம் (கணவர்)
மற்றும் குடும்பத்தினர்.**

தொடர்புக்கு:
077 617 6895

# அரசாங்கத்தின் இரட்டை வேடத்தை இனியாவது புரிந்துகொள்ளுங்கள்!

## முன்னிலை சோசலிச கட்சி கோரிக்கை

கொழும்பு, மார்ச் 27

ஜெனிவா பிரேரணை விவகாரத்தை அரசாங்கம் ஆரம்பத்திலிருந்து அரசியல் நோக்கங்களுக்காக மாத்திரம் பயன்படுத்திக் கொண்டது. 22 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தமையை அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலின் பிரதான பிரசாரமாகப் பயன்படுத்திக் கொள்ளும். எனவே, அரசாங்கத்தின் இரட்டை வேடத்தை மக்கள் இனியாவது புரிந்துகொள்ள வேண்டும் என முன்னிலை சோசலிச கட்சியின் ஊடகப் பேச்சாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

கொழும்பு சனசமூக கேந்திர மத்திய நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐ.நா. பிரேரணைக்கு எதிராக வாக்களித்த 11 நாடுகளையும், வாக்களிப்பிலிருந்து விலகியிருந்த 14 நாடுகளையும் ஒன்றிணைத்து இலங்கைக்குப் பெரும்பான்மை ஆதரவுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளமை அரசாங்கத்தின் இராஜதந்திர பலவீனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

ஜெனிவா விவகாரம் தொடர்பில் அரசாங்கம் முறையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. ஆரம்பத்திலிருந்து பொறுப்பற்ற வகையிலும், அடாவடித்தனமாகவும் செயல்பட்டது.

கடந்த வருடம் இலங்கைக்கு ஆதரவாகச் செயல்பட்ட ஜப்பான், தென் கொரியா உள்ளிட்ட 14 நாடுகள் நடுநிலை வகித்தமைக்கான காரணத்தை அரசாங்கம் ஆராய வேண்டும்.

2019 ஆம் ஆண்டுக்குப் பிறகு நாட்டில் பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. சிறு



பான்மை மக்கள் மாத்திரமல்ல பெரும்பான்மை சமூகத்தினர் கூட பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனா வைரஸ் விவகாரத்தை கொண்டு அரசாங்கம் இனங்களுக்கு மத்தியில் அநாவசிய பிரச்னைகளை தோற்றுவித்தது.

ஜெனிவா விவகாரத்தில் தோல்வியடைக் காரணமான தவறை அரசாங்கம் ஒருபோதும் திருத்திக் கொள்ளப் போவதில்லை. மாறாக 22 நாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களித்தமையை மாகாண சபைத் தேர்தலின் பிரதான பிரசாரமாகப் பயன்படுத்திக் கொள்ளும். இவ்வாறான நிலைமை இலங்கையை சர்வதேசத்தில் தனிமைப்படுத்தும்.

ஜெனிவா விவகாரத்தில் அரசாங்கத்தின் இரட்டை வேடத்தை அறிவார்ந்த சிங்கள மக்கள் இனியாவது புரிந்துகொள்ள வேண்டும். சர்வதேசத்துக்கு அடிபணியத் தேவையில்லை என அரசியல்வாதிகள் குறிப்பிடுவது வெறும் தேர்தல் பிரசாரமாகும். நாடு என்ற ரீதியில் ஒருபோதும் தனித்து செயல்பட முடியாது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சீன தடுப்பூசிக்கு விரைவில் அனுமதி 6 இலட்சம் டோஸ் அடுத்தவாரம் வரும்

கொழும்பு, மார்ச் 27

**சீனாவின் கொரோனா தடுப்பூசியான சினோபார்முக்கு விரைவில் அனுமதி வழங்கப்படவுள்ளது. இதேநேரம், சீனா அன்பளிப்பு செய்த தடுப்பூசிகள் 6 இலட்சம் அடுத்த வாரம் கிடைக்கும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

விமான தாமதங்கள் இல்லாத பட்சத்தில் இந்தத் தடுப்பூசிகள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் என்று சீனத் தூதரகம் உறுதி அளித்ததாக தேசிய மருந்துகள் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமண நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கைக்கு 6 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் கிடைக்கின்றபோதிலும், இதனைப் பயன்படுத்துவதற்கு தேசிய மருந்துகள் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை ஆணைக்குழு இன்னமும் அனுமதி அளிக்கவில்லை.

தடுப்பூசிகள் தொடர்பான நிலுவை பிரச்னைகள் குறித்து உற்பத்தி நிறுவனத்துடன் மெய்நிகர் வழியே விரைவில் பேச்சு நடத்தப்படவுள்ளது. சிக்கல்கள் தீர்ந்த பின்னர் தடுப்பூசிக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் பேராசிரியர் கூறினார்.

முன்னதாக 3 இலட்சம் தடுப்பூசிகளை சீனா அன்பளிப்பாக வழங்கியது. சினோபார்ம் உற்பத்தியாளர்களுடன் சீனாவுக்கான இலங்கையின் தூதுவர் கலாநிதி பாலித கொஹன்ன பேசியதன் பின்னர் மேலும், 3 இலட்சம் தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டதாக தூதுவர் பாலித கொஹன்ன தெரிவித்தார். (ஐ)



# கனேடியத் தூதுவர் யாழ். பல்கலைக்கு விஜயம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

கனேடிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிற் மக் கினொன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை நேரில் சென்று கலந்துரையாடினார்.

நேற்று மாலை யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்த கனேடியத் தூதுவர் டேவிற் மக் கினொன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பீடாதிபதிகள், பதிவாளர் மற்றும் மொழிபெயப்புக் கற்கைகள் துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் தற்போதைய நிலை, திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது. கலந்துரையாடலின் முடிவில், கனேடியத் தூதுவருக்கு பல்கலைக்கழகத்தின் சார்பில் நினைவுப் பரிசிலும் வழங்கப்பட்டது.

# மரக்கடத்தல் முறியடிப்பு!



சட்டவிரோதமான முறையில் அரிந்த மரங்களை கடத்திச்சென்ற நபர் ஒருவரை கைதுசெய்ததாக வவுனியா ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை கோதண்ட நொச்சிக்குளம் காட்டுப்பகுதியிலிருந்து கூமாங்குளம் நோக்கிச் சட்டவிரோதமான முறையில் மரங்கள் கடத்தப்படுவதாக ஈச்சங்குளம் இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய அப்பகுதிக்கு சென்ற ஈச்சங்குளம் இராணுவத்தினர், அம்மிவைத்தான் பகுதியில் வைத்து நூதனமான முறையில் மரக்கடத்தலில் ஈடுபட்ட நபரை வாகனத்துடன் கைது செய்து ஈச்சங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த மரக்கடத்தலில் வவுனியா கூமாங்குளத்தை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் பட்டா ரக வாகனம் ஒன்றும் 15 அடி நீளமுடைய 15 அரி மரங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன. (எ)

# ஈஸ்டர் தாக்குதல் பொறுப்பிலிருந்து முன்னாள் ஜனாதிபதி தப்பமுடியாது

## கூட்டுப்பொறுப்புடன் அரசாங்கம் இருந்திருக்க வேண்டும் என்கின்றார் அனுரகுமார திஸாநாயக்க

கொழும்பு, மார்ச் 27



"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விடயத்தில் அப்போது ஜனாதிபதியாக இருந்த மற்றும் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் பொறுப்பு இன்றி நடந்துகொண்டுள்ளார். இந்த விடயத்தில் பொறுப்பில் இருந்து விலக முடியாது. நாட்டில் பாதுகாப்புக்காகவே மக்கள் 2015 ஜனவரி 8 ஆம் திகதி புதிய அரசாங்கத்தை தெரிவு செய்தனர். அதன்படி அரசாங்கம் கூட்டுப் பொறுப்புடன் இருந்திருக்க வேண்டும்" என ஜே.வி.பி தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் முக்கியமாகத் தெரிவித்தவை வருமாறு:

"உயிர்த்த ஞாயிறு தக்குதலுக்கு முன்னர் கருக்கலைப்பு மருந்து, கொத்து உள்ளிட்ட கதைகள் பரப்பப்பட்டன. அத்துடன் தாக்குதலின் பின்னர் மீண்டும் தாக்குதல்கள் தொடர்பாக அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதுடன் பாடசாலைகளில் பெற்றோர் காவல் இருக்கும் நிலைமையும் ஏற்பட்டிருந்தது.

இதேவேளை பல பிரதேசங்களில் சம்பவத்தை அடிப்படையாக கொண்டு வன்முறைகளும் ஏற்பட்டிருந்தன. இந்நிலையில் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தில் என்று ஒருபக்கம் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டதுடன் இன்னுமொரு பக்கம் முஸ்லிம்களுக்கு எதிரான பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டன. இதனை தொடர்ந்து நவம்பர் மாதத்தில் புதிய ஜனாதிபதியொருவர் தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன் சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே காணப்பட்ட முரண்பாடுகளை அரசியலுக்காக சிலர் பயன்படுத்தியமை தேர்தல் முடிவுகளின் மூலம் காணக்கூடியதாக இருந்தது. இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய சஹ்ரான் வெளிப்படையாக இருந்த பயங்கரவாதியாகவே இருந்தார். அவர் சமூக வலைத்தளங்களில் வெளிப்படையாக பிரசாரங்களை செய்திருந்தார். அவரை சுதந்திரமாக சுற்றித்திரிய இடமளித்துள்ளார்கள். அதன்மூலம் தாக்குதல் வரையில் அவர் சென்றுள்ளார்.

இந்த விடயத்தில் அப்போது ஜனாதிபதியாக இருந்த மற்றும் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் பொறுப்பு இன்றி நடந்துகொண்டுள்ளார். இந்த விடயத்தில் பொறுப்பில் இருந்து விலக முடியாது. நாட்டில் பாதுகாப்புக்காகவே மக்கள் 2015 ஜனவரி 8 ஆம் திகதி புதிய அரசாங்கத்தை தெரிவு செய்தனர். அதன்படி அரசாங்கம் கூட்டுப் பொறுப்புடன் இருந்திருக்க வேண்டும்.

நடந்த தாக்குதல் நடந்த முறையை பார்க்கும் போது இது அரசியல் தாக்குதலாவே உள்ளது. இந்த தாக்குதலுக்கு உதவியவர்கள், தாக்குதலை தடுக்க தவறியவர்கள் தொடர்பாகவோ, இந்த தாக்குதலுக்கான நோக்கம் மற்றும் இதனை நடத்தியவர்கள் தொடர்பான தகவல்களை அறிந்துகொள்ள வேண்டியுள்ளது.

இந்த தாக்குதலின் பின்னால் வெளி சக்தியொன்றும் சூழ்ச்சியொன்றும் இருந்துள்ளதாக ஆணைக்குழு அறிக்கையில் சாட்சிமொன்றில் வெளியிடப்பட்ட கருத்து குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மைத்திரிபால சிறிசேனவும் அதுபற்றி கூறியுள்ளார். அதேபோன்று புலனாய்வு துறை அதிகாரி, பொலிஸ் அதிகாரிகளும் இது தொடர்பாக கூறியுள்ளனர். இதனால் இது தொடர்பான தகவல் வெளியாக வேண்டும். அதுவரையில் நாட்டுக்கு பாதுகாப்பில்லை. அப்படி வெளியிடவில்லை என்றால் அந்த சூழ்ச்சிதாரர்கள் மீண்டும் செயற்படலாம்" என்றார்.






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : வழங்குபவர் திருமதி .கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூார்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : மைதானம்-வாராந்த விளையாட்டு நிகழ்வுகளின் தொகுப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை

**இரவு**
7.00 மணி : சுப்பர் குறூப்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்



10.00 மணி : யாவரும் கேளீர்

---

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

---

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித மிக்கேல் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : பாடல்
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : இஸ்லாமிய உலகம் (மறு ஒளிபரப்பு)
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org